ஜெகத்தாரணி

# செந்தமிழ் வாசகம்

## நான்காம் வகுப்பு

(இரண்டாம் பருவம்)

ஆசிரியர்

**குரும்பை உலகநாதன்**

மற்றும் ஆசிரியர் குழு

அட்டைப் படம் மற்றும் புத்தக வடிவமைப்பு

**V.ஜெகந்நாதன்**

ஜெகத்தாரணி பப்ளிஷிங் ஹவுஸ்

எஜுகேஷனல் பப்ளிஷர்ஸ்

48/40, வடக்குச் சித்திரை வீதி, மதுரை - 625001

சென்னை மதுரை கோவை

© உரிமை பதிப்பாளருக்கே செந்தமிழ் வாசகம்
பதிப்பாளர் : ஜெஸ்ஸி பப்ளிகேஷன்ஸ்
நான்காம் பதிப்பு : 2023 (புதிய பாடத்திட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட நூல்)
பாடநூல் தொகுப்பு : குரும்பை உலகநாதன்

## நாட்டுப்பண்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஸ மாகே
காஹே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே ஜய ஹே ஜய ஹே
ஜய ஜய ஜய ஜய ஹே !

– மகாகவி இரவீந்திரநாத் தாகூர்.

## தமிழ்த்தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே!
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே! தமிழணங்கே!
உன் சீரிளமைத் திறம் வியந்து செயல் மறந்து வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே !! வாழ்த்துதுமே !!!

– மனோன்மணியம் பெ.சுந்தரனார்

## தேசிய ஒருமைப்பாட்டு உறுதிமொழி

“நாட்டின் உரிமை வாழ்வையும் ஒருமைப்பாட்டையும் பேணிக் காத்து வலுப்படுத்தச் செயற்படுவேன்” என்று உளமார நான் உறுதி கூறுகிறேன்.

“ஒருபோதும் வன்முறையை நாடேன், என்றும், சமயம், மொழி, வட்டாரம் முதலியவை காரணமாக எழும் வேறுபாடுகளுக்கும், பூசல்களுக்கும், ஏனைய அரசியல் – பொருளாதார குறைபாடுகளுக்கும் அமைதி நெறியிலும் அரசியல் அமைப்பின் வழியிலும் நின்று தீர்வு காண்பேன்” என்றும், நான் மேலும் உறுதியளிக்கிறேன்.

# முகவுரை



“செந்தமிழ் வாசகம்” என்னும் இவ்வரிய நூல் பள்ளிச்சிறார்களின் அழகிய கரங்களில் தவழப்போவதை நினைத்து மகிழ்ச்சி அடைகிறோம். இன்றைய குழந்தைகளின் பன்முக ஆற்றல்களான உணரல், படித்தல், பேசுதல், எழுதுதல், வரைதல், வண்ணமிடுதல், கற்பனைத்திறன் வளர்த்தல், பாடுதல், ஆடுதல் போன்றவற்றை வளர்ப்பதில் இந்நூல் உறுதுணை புரியும் என்று நம்புகிறோம்.

சின்னஞ்சிறு மழலைச் செல்வங்கள் சிந்தை மகிழப் படிக்கும் வகையில் அழகாகவும் அற்புதமாகவும் அமைந்துள்ளது, இந்த “செந்தமிழ் வாசகம்”. தமிழை, தமிழ்ச்சொற்களை எளியமுறையில் அறியவும், எழுதவும் ஏற்ற முறையில் எளிமையும் இனிமையும் பொருந்திய வார்த்தைகளைக் கொண்டு தொகுக்கப்பட்டுள்ளது. சொற்களின் பொருளை விளக்குவதற்கு ஆங்காங்கே அழகிய படங்களுடன் அலங்கரிக்கப்பட்டுள்ளது.

அறநெறியைப் போதிக்கும் வண்ணம் அற்புதமான சிறுசிறு பாடல் தொகுப்பினையும், நீதிக்கதைகளையும் ஆங்காங்கே ஆசிரியர் கையாண்டுள்ளது குழந்தைகளின் படிப்பாற்றலை ஊக்குவிக்கும். கதை, கவிதைகளின் மூலம் சிறந்த வாழ்க்கையின் ஒழுங்குமுறைகளும் நீதிகளும் உணர்த்தப்பட்டுள்ளன. பாடத்துடன் இணைந்த பயிற்சிகள் குழந்தைகளின் புரிதல் திறன் கண்டறியும் வண்ணம் அமைந்துள்ளன. அரசு கல்வித்துறையால் அறிமுகப்படுத்தப்பட்ட தொடர் மற்றும் முழுமையான மதிப்பீடு (**“CCE METHOD”**) நவீனப்படுத்தப்பட்ட கல்விமுறையைக் கையாண்டுள்ளது, நற்பயனை நல்க வல்லது.

குழந்தைகள் விரும்பிப் படிக்கும் வகையில், நல்ல சந்தத்துடன் கூடிய வெல்லத்தமிழ்ப் பாடல்களும், குழந்தைகளின் படிக்கும் வேட்கையை நன்கு தூண்டும் வண்ணம் அமையப்பெற்றுள்ளன.

இத்தகைய சீரிய எங்கள் முயற்சியினை பெற்றோர்களும், ஆசிரியப் பெருமக்களும் அங்கீகரித்து, தமிழ்மொழியினைப் பயிலும் மாணவச் செல்வங்களும் இந்நூலை நல்லதொரு வழிகாட்டியாகப் பயன்படுத்திக் கொள்ள அன்புடன் வேண்டுகிறோம். இப்புத்தகத்தின் நிறைகுறைகளை எங்களுடன் பகிர்ந்துக் கொள்ளத் தமிழ்கூறும் நல்லுலகோரை அன்புடன் வேண்டுகிறோம்.

பதிப்பகத்தார்



# பொருளடக்கம்




| வ. எண் | பாடத்தலைப்புகள் | பக்க எண் |
|---|---|---|
| 1. | காவல்காரர் | 5 |
| 2. | இயற்கை விவசாயம் | 12 |
| 3. | யானைக்கும் பானைக்கும் சரி | 19 |
| 4. | நன்னெறி | 25 |
| 5. | பனிமலைப்பயணம் | 28 |
| 6. | ஆராய்ந்திட வேண்டும் | 34 |
| 7. | திருக்குறள் கதைகள் | 41 |
| 8. | பசுவுக்குக் கிடைத்த நீதி | 53 |
| 9. | வேலைக்கேற்ற கூலி | 62 |
| | அகரமுதலி | 70 |




1

# காவல்காரர்

சட்டை மேலே கோட்டு மாட்டிச்
சரிகை போட்ட வேட்டி கட்டி
நட்ட நடுவே தோட்டம் தன்னில்
ராஜா போலே நின்றி ருந்தார்

இரவும் பகலும் தூங்கி டாமல்
இங்கு மங்கும் நகர்ந்தி டாமல்
பெருமை யோடு காவல் காப்பார்
பெயரில் லாத காவல் காரர்

காக்கை குருவி அங்கே வந்தால்
காவல் காரர் நிற்கக் கண்டு
சீக்கி ரத்தில் வந்த வழியே
திரும்பி ஓடும் பயந்து கொண்டு

காற்று பலமாய் அடித்த தாலே
கனத்த மழையும் பெய்த தாலே
நேர்த்தி யான அவரின் உடைகள்
நித்தம் கிழிந்து வந்த தையோ



இதனைக் கண்ட காகம் ஒன்று
இந்தச் சமயம் இவர்க்கு நாமும்
உதவி செய்தால் பயமில் லாமல்
உலவ லாமே என்று கருதி



அருகில் உள்ள வீட்டிற் குள்ளே
யாரும் இல்லா வேளை சென்று
கறுப்புக் கோட்டு வெள்ளைச் சட்டை
கட்டிக் கொள்ள சரிகை வேட்டி

எடுத்து வந்து காவல் காரர்
இருக்கும் இடத்தில் போட்டு விட்டே
உடுத்திக் கொள்வீர் என்று சொல்லி
ஒதுங்கி நின்று பார்த்த தங்கே

காவல் காரர் பழைய உடையைக்
கழற்றிக் கீழே போட வில்லை
ஆவலோடு புதிய உடையை
அணிய வில்லை அசைய வில்லை

உடனே காகம் அருகில் சென்றே
உற்று நன்றாய்ப் பார்த்த பின்னர்
அடடே இந்தக் காவல் காரர்
யாரோ என்று நினைத்தி ருந்தேன்

வைக்கோல் மேலே துணியைச் சுற்றி
வைத்திருக்கும் பொம்மை என்றே
இக் கணத்தே நண்பர் அறிய
எடுத்துச் சொல்வேன் என்று கூறி,

காவல் காக்கும் பொம்மை தலையில்
காலை வைத்து நின்று கொண்டு
கூவி அழைத்துப் பறவை யாவும்
கூடச் செய்து விட்ட தங்கே

- அழ.வள்ளியப்பா



ஓசைநயமும், கருத்தும் மிக்க பாடலைக் கேட்டுப் புரிந்து கொள்ளும் திறன்

## பாடல் பொருள்

ஒரு அழகான சோளக்கொல்லை. அதில் செழித்து வளர்ந்த சோளத்தட்டைகள். அத்தட்டைகளில் விளைந்திருந்த சோளக் கதிர்களை காக்கைகளும், குருவிகளும் கொத்தித் தின்றுவிடாமல், காவல் காக்க வேண்டி சோளக்கொல்லைப் பொம்மை ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. அந்தப் பொம்மையினைக் காவல் காக்கும் மனிதன் என்று நினைத்த காகம் அச்சமடைந்து திரும்பி ஓடுகிறது. பலத்த காற்றடித்துப் பெருமழை பெய்ததால் பொம்மை அணிந்திருந்த ஆடைகள் கிழிந்து விட்டன. இதனைக் கண்ட ஒரு காகம் இவருக்கு நாம் உதவி செய்தால் பயமில்லாமல் உலாவலாமே என்று நினைத்தது.

எனவே அருகிலிருந்த வீட்டிற்குள் யாரும் இல்லாத நேரத்தில் புகுந்து அங்கிருந்த கருப்புக் கோட்டையும், வெள்ளைச் சட்டையையும், கட்டிக் கொள்ள சரிகை வேட்டியையும் எடுத்து வந்து காவல்காரர் இருக்கும் இடத்தில் போட்டது. இந்த உடைகளை அணிந்து கொள்ளுங்கள் என்று கூறி ஒதுங்கி நின்றது. நீண்ட நேரமாகியும் காவல்காரர் உடைகளை அணிந்து கொள்ளாததால், அது உயிரற்ற வைக்கோல் அடைக்கப்பட்ட பொம்மை என்பதை காகம் கண்டு கொண்டது. அதனால் அச்சமின்றி பொம்மையின் தலையில் ஏறி நின்று மற்ற பறவைகளையும் சோளக்கதிர்களைக் கொத்தித்தின்ன கூவி அழைத்தது.



### நூல் வெளி:



| | | |
|---|---|---|
| ஆசிரியர் | : | அழ.வள்ளியப்பா |
| இயற்பெயர் | : | வள்ளியப்பன் |
| பெற்றோர் | : | அழகப்ப செட்டியார்,<br>உமையாள் ஆச்சி |
| காலம் | : | 1922 முதல் 1989 வரை |
| பிறந்த ஊர் | : | புதுக்கோட்டை |
| விருது | : | தமிழ்ப் பேரவைச் செம்மல் |
| நூல்கள் | : | அம்மாவும் அத்தையும், ஹா குழந்தைப் பாடல்,<br>மல்லிகைப் பாடல், மேலும் சில பாடல்கள். |

## உரையாடலாம் வாங்க!



- கதைப்பாடலை ஓசைநயத்துடன் பாடி மகிழ்க.
- பாடலின் பொருளைப் புரிந்துகொண்டு பாடுக.
- பாடல் பொருளை உமது சொந்த நடையில் கூறுக.

## கலந்துரையாடுவோம்!



சூழல் 1 : மாலாவின் அம்மா நம் வீட்டு பெரியோர் மட்டுமின்றி வயதில் மூத்தோர்கள் மற்றும் பெரியவர்கள் யாராக இருந்தாலும் அவர்களிடம் பணிந்து மரியாதையாக நடக்க வேண்டும் என்று கூறினார்.

சூழல் 2 : மருதுவின் அப்பா யார் என்ன கேட்டாலும் கொடுக்கக் கூடாது என்று கூறுகிறார், யார் கூப்பிட்டாலும் காதில் வாங்கிக் கொள்ளக்கூடாது என்கிறார்.

இது பற்றி உங்கள் கருத்து என்ன?

## சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுவோமா?

1. பார்த்ததங்கே இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ..................................

(அ) பார்த்த + அங்கே (ஆ) பார்த்து + அங்கே

(இ) பார்த்தது + எங்கே (ஈ) பார்த்தது + அங்கே

2. உடையை கீழே போடவில்லை. இத்தொடரில் அடிக்கோடிட்ட சொல்லின் எதிர்ச்சொல் ..................................

(அ) மேலே (ஆ) அருகில்

(இ) தொலைவில் (ஈ) வளைவில்

3. சோளக்கொல்லைப் பொம்மை என்பது ..................................

(அ) உயிருள்ள பொருள் (ஆ) உயிரற்ற பொருள்

(இ) இயற்கையானது (ஈ) மனிதன் செய்ய இயலாதது

4. நினைத்து + இருந்தேன் - இச்சொல்லைச் சேர்த்து எழுதக் கிடைப்பது.......

(அ) நினைத்துஇருந்தேன் (ஆ) நினைத்துதிருந்தேன்

(இ) நினைத்திருந்தேன் (ஈ) நினைத்திருப்பேன்

5. நேர்த்தி - இச்சொல்லுக்குரிய பொருள் ........................................

(அ) தோற்றம் (ஆ) பார்வை

(இ) சாட்சி (ஈ) சரியான அமைப்பு

## வினாவிற்கு ஏற்ற விடையளிக்க.

1. ராஜாவைப் போல் சோளக்கொல்லையின் நடுவே நின்றவர் யார்?

2. காவல்காரருக்குத் தோட்டத்தில் உள்ள பணி யாது?

3. கறுப்புக்கோட்டு, வெள்ளைச்சட்டையை காவல்காரருக்குக் கொடுத்தது யார்?

4. காகம் கொடுத்த ஆடைகளைக் காவல்காரர் ஏன் அணியவில்லை?

## முதலெழுத்து ஒன்று போல் வரும் சொற்களை எழுதுக.

| | | | |
|---|---|---|---|
| சட்டை | சரிகை | ................ | ................ |
| ................ | ................ | ................ | ................ |

## பூக்களுக்கு பொருத்தமான வண்டுகளை இணைக்க.




இணைந்த சொற்களைக் கீழே எழுதுக.

1. சரிகை வேட்டி
2. ........................................
3. ........................................
4. ........................................
5. ........................................

## பாடலைத் தொடர்ந்து பாடுவோமா?

அத்தை இங்கே வந்தாங்க
அல்வா நிறைய தந்தாங்க
மாமா இங்கே வந்தாங்க
மாம்பழம் நிறைய தந்தாங்க

பெரியப்பா
---------------------------------
பேரீச்சம்பழம்
---------------------------------
---------------------------------
---------------------------------

பெரியம்மா
---------------------------------
பிஸ்கோத்து
---------------------------------



---------------------------
---------------------------

## உரைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

தூய்மையின் அடையாளமாகக் கருதப்படும் மலர் தாமரை ஆகும். தாமரை ஒரு நீர்வாழ் தாவரம் ஆகும். இது புனிதமாக போற்றப்படுவதுடன் வழிபாட்டிற்கும், மருந்தாகவும் பயன்படுகிறது. இது நீர்ப்பிடிப்பு பகுதிகளில் அதிகமாக காணப்படும். இது காலையில் சூரியன் உதிக்கும் பொழுது மலரும். தாமரை இலையில் தண்ணீர் ஒட்டாது. இதன் விதைகள் பல ஆண்டுகளுக்கு முளைக்கும் தன்மை கொண்டது. தாமரைக்கு வழங்கும் வேறு பெயர்கள் அரவிந்தம், கமலம், பதுமம், முளரி, வனசம் ஆகியவை ஆகும். தாமரை நம் நாட்டின் தேசியமலர் என்ற பெருமைக்குரியது என்பது குறிப்பிடத்தக்கது.

### வினாக்கள்

1. தாமரை எந்த மாதிரியான பகுதிகளில் காணப்படும்?
2. தாமரை விதையின் தனித்தன்மை என்ன?
3. தாமரைக்கு வழங்கப்படும் வேறுபெயர்கள் என்ன?
4. இந்திய நாட்டின் தேசிய மலர் எது?



## செயல் திட்டம்

கீழ்க்காணும் செய்திகளைத் திரட்டுக.

1. உன் வீட்டிலும், உனது வீட்டின் அருகில் உள்ளவர்களின் வீட்டிலும் என்னென்ன செடிகள் வளர்க்கிறார்கள். தெரிந்து வா.
2. அதற்கு எவ்வாறு நீர் பெறப்படுகிறது என்பதையும் சேகரித்து வா!
3. ஒவ்வொரு செடிகளின் பயன்களைப் பற்றி உனது பெற்றோர் அல்லது உறவினர்களிடம் அறிந்து வா.

**கோடிட்ட இடத்தில் தகுந்த சொற்களைக் கொண்டு நிறைவு செய்து தகுந்த தலைப்பினை எழுதுக.**

| | | | | |
|---|---|---|---|---|
| குளம், | உயிர்வாழ, | மழை, | சேமிக்க, | உணவு, |
| வாழ, | மரம், | தண்ணீர், | பயனடைய வேண்டும் | |

தலைப்பு : ..........................................

மழை நமக்கு ............................... இன்றியமையாத ஒன்று. மழை பொழிந்தால் தான் ............................................................... பஞ்சமின்றி மனிதர்கள், விலங்குகள், தாவரங்கள் உயிர் ..................................... முடியும். நம் பூமியில் ..................................... பெறுவதற்கு ............................................................. வளர்க்க வேண்டும். மழை நீரை வீணாக்காமல் ....................................... வேண்டும். நாம் மழை நீரை ........................... ஏரி, நீர்த்தேக்கங்களை அமைத்து ....................................................

## தெரிந்து கொள்வோம்

1. தோட்டத்தில் பூச்சித் தாக்குதலைத் தடுக்க முட்டை ஓட்டுத்தூளுடன், சிறிது உப்பைக் கலந்து செடியைச் சுற்றிலும் வளையம் போட வேண்டும்.
2. வேளாண்மைக்குப் பயன்படுத்தப்படும் பூச்சிக்கொல்லிகள் மற்றும் களை கொல்லிகள் தாவரங்களின் கனிமவளங்களைக் குறைக்கின்றன.
3. மண் அரிப்பைத் தடுக்க, மரங்கள் நட்டு வளர்த்தல் இன்றியமையாதது.

# 2 இயற்கை விவசாயம்

மேனகாவும், அவளது தாயும் கிராமத்தில் இருக்கும் பாட்டி வீட்டிற்கு செல்கிறார்கள்.



மேனகா : அம்மா இந்தக் கிராமம் தான் எவ்வளவு அழகாக இருக்கிறது.

தாய் : ஆமாம் நாம் ஊருக்கு வந்து நீண்ட காலமாகிவிட்டது. இப்பொழுது பயிர்கள் விளைச்சலுக்கான நேரம். அதனால் கிராமம் பார்ப்பதற்கு பச்சைப்பசேலென்று மிக அழகாக இருக்கிறது.

மேனகா : அம்மா, பாட்டி வீடு வந்து விட்டது.

பாட்டி : வாம்மா, வா மேனகா எப்படி இருக்கிறாய்?

மேனகா : நாங்கள் நன்றாக இருக்கிறோம் பாட்டி. தாத்தா எங்கே?

| | | |
|---|---|---|
| தாத்தா | : | இதோ வந்துவிட்டேன் செல்லக்குட்டி, எப்படி இருந்தது கிராமத்துப் பயணம்? |
| மேனகா | : | தாத்தா, மிகவும் அற்புதம். எங்கு பார்த்தாலும் பச்சைப் பசேலென்ற இயற்கைக் காட்சிகள் அதன் அழகை சொல்லவே முடியாது தாத்தா. |
| தாத்தா | : | நீ சாப்பிட்டாயா? நேரமாகிவிட்டது வா உறங்கலாம். (இரவு முடிந்து விடியல் வந்தது) |
| மேனகா | : | அம்மா, தாத்தா எங்கே? |
| அம்மா | : | தாத்தா, தினமும் விடியற்காலையில் வயலுக்குச் செல்வது வழக்கம். |
| மேனகா | : | பாட்டி எனக்குத் தலை வலிக்கிறது. |
| பாட்டி | : | சிறிது ஓய்வெடு. நான் ஒரு மூலிகைசாறு தயாரித்து இருக்கிறேன். அதனை குடித்தால் தலைவலி ஒரு நொடியில் சரியாகி விடும். |
| மேனகா | : | பாட்டி எனக்கு தலைவலி சரியாகிவிட்டது. இங்கு நீங்கள் தான் மருத்துவரா பாட்டி? இதுவே எங்கள் ஊரில் இருந்தால் மருத்துவர் ஊசி போட்டு பெரிய பெரிய மாத்திரைகளை விழுங்கச் சொல்வார். நீங்கள் மட்டும் இதை எப்படி கற்றுக் கொண்டீர்கள்? |
| பாட்டி | : | அதுவா கிராமத்தில் தலைமுறை, தலைமுறையாக வருவது தான் மேனகா. "மூலிகைகளைக் கொண்டு மருத்துவம் பார்ப்பார்கள்." இதனை "கை வைத்தியம்" என்று சொல்லலாம். |
| மேனகா | : | கை வைத்தியமா! அப்படின்னா என்ன பாட்டி? |
| பாட்டி | : | சொல்கிறேன் கேளு. கை வைத்தியம் என்பது கிராமப்புறங்களில் பார்க்கக் கூடிய மருத்துவத்தைக் கூறுவதாகும். அதுமட்டுமா, கிராமப்புற மருத்துவத்தை, கை வைத்தியம், பாட்டி வைத்தியம், மூலிகை மருத்துவம், வீட்டு வைத்தியம், பரம்பரை வைத்தியம், பச்சிலை வைத்தியம், இயற்கை வைத்தியம் என்றெல்லாம் கூறுவர். |



மேனகா : அடடா! கேட்பதற்கே ஆச்சரியமாக இருக்கிறதே பாட்டி! "இன்னும் உங்களுக்குத் தெரிந்த மருத்துவத்தைப் பற்றி கூறுங்களேன்."

பாட்டி : நாம் அன்றாடம் பயன்படுத்தக்கூடிய உணவுப் பொருள்களில் சுக்கு, மிளகு, இஞ்சி, மஞ்சள் போன்றவை நோய் தீர்க்கும் மருந்தாகப் பயன்படுகிறது.

மேனகா : சரி பாட்டி, வாருங்கள் நாம் வயலுக்குச் சென்று தாத்தா என்ன செய்கிறார் என்று பார்ப்போம்.
(வயல்வெளிக்குச் செல்கிறார்கள்)



தாத்தா : வா மேனகா, வரும் வழியில் வயல்வெளிகளைக் கண்டு களித்தாயா?

மேனகா : இல்லை தாத்தா, எனக்கு தலை வலியாக இருந்தது. அப்போது பாட்டி கசாயம் வைத்துக் கொடுத்தார்கள்.

இப்ப பரவாயில்லை சரியாகி விட்டது. "நீங்கள் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்" உங்கள் கையில் எதையோ வைத்து தெளித்துக் கொண்டிருக்கிறீர்கள்.

தாத்தா : "இதற்கு பெயர் உரம்". பயிர்கள் நன்கு செழித்து வளர்வதற்கு உறுதுணையாக இருக்கிறது.

மேனகா : உரமா! அப்படின்னா என்ன தாத்தா? அதை எதிலிருந்து தயாரிக்கிறார்கள்? கொஞ்சம் சொல்லுங்களேன்.



தாத்தா : மண்ணிற்கு மேலும் வளமூட்ட பயன்படுவது உரம். மாட்டுச்சாணம், இலை, தழை, எரு, ஆட்டுப்புழுக்கை போன்ற இயற்கைக் கழிவுப் பொருட்களால் தயாரிக்கப்படுவதே உரமாகும். இதற்கு "இயற்கை உரம்" என்று மற்றொரு பெயரும் உண்டு.

மேனகா : தாத்தா. நான் தொலைக்காட்சியில் பார்த்தவரை பயிர்களுக்கு உங்களைப் போன்று உரங்களை தெளிக்காமல் "மூட்டைகளில் அடைக்கப்பட்ட வெள்ளை மாவு போன்ற ஒன்றை கருவியில் கொட்டி நீர் ஊற்றியும் தெளிக்கிறார்கள் அல்லது நீர் போன்ற பூச்சிக் கொல்லி மருந்தை தெளிக்கிறார்கள்."அது போல நீங்கள் ஏன் தெளிக்கவில்லை?"

தாத்தா : அவர்களைப் போல நாமும் செய்தால் பயிர்களைக் காக்கக்கூடிய புழுபூச்சிகள் அழிந்துவிடும். மண்புழுக்கள் மண்ணில் மேலும், கீழுமாக செல்லும் போது அந்தத்



துளைகளின் வழியாக காற்றும், நீரும் வேர் மண்டலத்தை சென்று அடைந்து பயிர்கள் செழிப்பாக வளர உதவுகிறது. மண்புழுவானது "உழவர்களின் நண்பன்" என்று அழைக்கப்படுகின்றது.

மேனகா : இயற்கை உரங்களைப் பற்றி சொன்னீர்கள் அல்லவா. அதே போல் அவர்கள் "வெள்ளைப் பொடியைத் தெளித்தார்களே" அது என்னவென்று சொல்லுங்களேன்.

தாத்தா : அதற்கு பெயர் செயற்கை உரம். செயற்கை உரம் என்பது வேதியியல் அடிப்படையில் தயாரிக்கப்படுகிறது. இதனால் மண்ணில் உள்ள புழுக்கள் அழிந்து விடுகிறது. பயிர்கள் விரைவாக வளரவும், உற்பத்தி பெருக்கி லாபம் ஈட்டுவதற்கும் வேதியியல் உரம் பயன்படுகிறது. இது மட்டுமா பயிர்களுக்கு தெளிக்கின்ற உரம் மண்ணுக்குள் ஊடுருவி நிலத்தடி நீரையும் நிலத்தையும் பாதிக்கிறது.

மேனகா : அதனால் தான் இப்போதெல்லாம் "எங்கள் ஊரில் ஆர்கானிக் பொருள்களை வாங்குவதில் மக்கள் ஆர்வம் காட்டுகிறார்கள்". ஆர்கானிக் என்றால் என்ன?

தாத்தா : ஆர்கானிக் என்பது இயற்கை என்பதை குறிக்கும். இயற்கையினால் உருவாக்கப்பட்ட அனைத்துப் பயிர்களையும் சொல்லலாம்.
ஏன்? உங்கள் வீட்டில் கூட மாடித்தோட்டம் அமைத்து தரமான காய்கறிகளை உண்ணலாமே!

மேனகா : அதெப்படி தாத்தா?

தாத்தா : சொல்கிறேன் கேள்! உங்கள் வீட்டில் தினமும் பயன்படுத்தக்கூடிய காய்கறிக் கழிவுகளை ஒரு தொட்டியில் சேகரித்து அதனை மட்கச் செய்து சிறு தொட்டிகளில் தரமான விதைகளைக் கொண்டு பயிர் செய்யலாம். இதனால் சத்தான கீரை, காய்கறிகளை நாமே உற்பத்தி செய்து உண்ணலாம். கத்தரி, வெண்டை, தக்காளி, அவரை, பாகற்காய், பச்சை மிளகாய் முதலியவற்றை வளர்க்கலாம்.

மேனகா : தாத்தா, நான் நகரத்திற்கு சென்றவுடன் இயற்கை உரங்களைப் பற்றி என் வகுப்பிலும், என் பக்கத்து வீடுகளிலும் கூறி மாடித் தோட்டம் அமைக்குமாறு எடுத்துரைப்பேன்.

தாத்தா : நேரமாகிவிட்டது. வா, வீட்டிற்கு போகலாம்.

'ஆற்றுவார் ஆற்றல் பசிஆற்றல் அப்பசியை
மாற்றுவார் ஆற்றலின் பின்'.

- திருக்குறள் 225

பசியைப் பொறுத்துக் கொள்ளும் நோன்பைக் கடைபிடிப்பதை விடப் பசித்திருக்கும் ஒருவருக்கு உணவு அளிப்பதே சிறந்ததாகும்.

உழவுக்கு கை கொடுப்போம் விவசாயத்தை மேம்படுத்துவோம்.

## உரையாடலாம் வாங்க!



- நீங்கள் மேனகாவாக இருந்தால் விவசாயத்தின் மேம்பாட்டிற்காக என்ன செய்வீர்கள்? வகுப்பில் உரையாடுக.
- உழவுத் தொழில் இல்லையென்றால் உலகம் என்னவாகும்? உன் கருத்துக்களை கூறுக.

## சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுவோமா?

1. **மாடித்தோட்டம்** இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ..........................

(அ) மாடி + தோட்டம் (ஆ) மாடியில் + தோட்டம்

(இ) மாடித் + தோட்டம் (ஈ) மாடியின் + தோட்டம்

2. **விடியல் + காலை** என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைப்பது ..........................

(அ) விடியற்காலை (ஆ) விடிகாலை

(இ) விடிந்தகாலை (ஈ) விடியும்காலை

3. **பரம்பரை** இச்சொல் குறிக்கும் பொருள் ..........................

(அ) தலைமுறை (ஆ) உறவுமுறை

(இ) சொந்தம் (ஈ) உறவினர்

4. **இயற்கை + உரம்** என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைப்பது ..........................

(அ) இயற்கையான உரம் (ஆ) இயற்கை உரம்

(இ) இயற்கையுரம் (ஈ) இயற்கையின் உரம்

## வினாவிற்கு ஏற்ற விடையளிக்க.

1. பாட்டி வைத்தியம் என்றால் என்ன?

2. ஆர்கானிக் என்பது எதைக் குறிக்கிறது?

3. மண்புழுக்களினால் என்ன பயன்?

4. செயற்கை உரங்களைப் பயன்படுத்துவதால் ஏற்படும் விளைவுகளைக் கூறுக.

## நிறுத்தற்குறியிடுக.

1. ஆகா இந்த கிராமம் தான் எவ்வளவு அழகாக இருக்கிறது

2. நாட்டுப்புற மருத்துவம் என்றால் என்ன

3. பயறு நெல் காய் கனி போன்றவற்றை விளைவித்தல் விவசாயம் எனப்படும்

### செயல் திட்டம்

உங்கள் வீட்டில் காய்கறிக் கழிவுகளையும் மற்றும் மட்கும் குப்பைகளையும் பயன்படுத்தி, இயற்கை உரம் தயார் செய்க. சிறு தோட்டம் அமைத்து அந்த உரத்தைப் பயன்படுத்தி காய்கறிகளை விளையச் செய்க.

**சரியான கட்டத்தில் எடுத்து எழுதுக.**

(அவரை, கத்தரி, புடலை, திராட்சை, தக்காளி, பீட்ரூட், வெண்டை, உருளைக்கிழங்கு, சேனை, கேரட், பூசணி)

இவைகள் எத்தகைய தாவர வகையைச் சார்ந்தது என்பதைக் கட்டத்தில் எழுதுக.

| வ.எண் | செடி | மண்ணுக்கு அடியில் | கொடி |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

**புதிய சொற்களை உருவாக்கலாமா?**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ப | ட | ம் | எ | ந | த | மி | ழ் | க | ர |
| இ | கா | த | ண் | ண் | வி | க | ரு | ப் | பு |
| ம | க | யா | க | ப | ச | வ | ப | ந் | து |
| க | ம் | ன | ள் | ன் | ந | ப | ழ | வ | க |
| பு | மெ | ற | ப | ழ | ம் | ம் | ள | சீ | நா |
| எ | சி | ங் | க | ம் | கி | ப | ட | க | ய் |
| ப | வ | மே | க | ம் | ம | ர | ம் | ய | ரு |
| சு | ர் | ஞ | உ | ண | வு | ம் | ன | லி | க |

படம், தமிழ், பசு.

**வண்ணம் தீட்டி மகிழ்வோம்.**



# 3 யானைக்கும் பானைக்கும் சரி



கோபாலபுரம் என்ற ஊரில் கோவிந்தன் என்ற ஒரு யானைப்பாகன் வாழ்ந்து வந்தான். அவன் அழகான யானை ஒன்றை வளர்த்து வந்தான். அவன் காலையில் யானையைக் குளிப்பாட்டி அலங்காரம் செய்து அவ்வூர் தெருக்களில் அழைத்துச் செல்வான். யானையைப் பார்க்க அவ்வூர் சிறுவர்கள் ஆர்வமாக வருவார்கள். அதில் சிலர் யானையைப் பின்தொடர்ந்து செல்வர். கோவிந்தன் அந்த ஊரின் மையத்தில் இருந்த கோவில் வாசலில் யானையுடன் நிற்பான். கோவிலுக்குப் பிரார்த்தனை செய்ய வருபவர்கள் அந்த யானையை ஆவலுடன் பார்ப்பதுடன் அதனிடம் ஆசி பெறுவர். பாகனின் தூண்டுதலால் யானை தன் துதிக்கையைத் தூக்கி அவர்கள் தலையில் வைத்து ஆசி வழங்கும். பக்தர்கள் மகிழ்ந்து யானையின் துதிக்கையில் பணம் வைப்பார்கள். யானை அதை வாங்கி பாகனிடம் கொடுக்கும். பாகன் கோவிந்தன் அதில் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு யானைக்குத் தீனியும், தன் வாழ்வுக்கு தேவையான பொருள்களையும் வாங்கிக் கொள்வான்.

தன் வருமானத்தைப் பெருக்குவதற்காக கோவில் விழா, கல்யாணம் போன்ற விசேஷங்களுக்கு யானையை அலங்கரித்து ஊர்வல நிகழ்ச்சிக்கு வாடகைக்கு விடுவான். அதில் அவனுக்கு நிறையப் பணம் கிடைத்தது. பணம் வசூலிப்பதில் கராராக இருப்பான். மிகவும் பொல்லாதவன்.

கோபாலபுரத்தில் கதிரேசன் என்பவர் வியாபாரம் செய்து வந்தார். மிகவும் நல்லவர். பொருள்களை நியாய விலையில் விற்றதாலும், அவ்வூரில் ஏழை, எளியவர்களுக்கெல்லாம் தன்னாலான உதவிகளைச் செய்ததாலும் நற்பெயர் பெற்றிருந்தார். அவருடைய மகள் நந்தினி கல்லூரிப் படிப்பை முடித்துவிட்டதால், சிறப்பாக திருமணம் செய்ய விரும்பினார். திருமண ஊர்வலத்தில் கலந்து கொள்ள கோவிந்தன் யானையை வாடகைக்கு எடுத்துச் சென்றார். ஊர்வலத்தில் சென்ற யானை என்ன காரணத்தாலோ, ஊர்வலத்தின் இடையிலேயே பாதி வழியில் திடீரென கீழே விழுந்தது. அப்படியே இறந்து விட்டது.

செய்தியறிந்த கதிரேசன் கலங்கிப் போனார். யானைப்பாகன் பொல்லாதவனாயிற்றே என்று பயந்தார். என்ன செய்வது என்று தெரியாமல் விழித்தார். திருமணம் முடிந்ததும் யானைப்பாகன் கோவிந்தனை அழைத்து நடந்தவற்றை விளக்கமாக எடுத்துக் கூறினார். யானைக்கு உரிய நியாயமான விலையை தான் உடனே தருவதாக ஒப்புக் கொண்டார். ஆனால் பொல்லாத அந்த யானைப்பாகன் இவரது சமாதானத்தை ஏற்றுக் கொள்ள முடியாது என்று கூறியதோடு "அதே யானைதான் எனக்கு வேண்டும். பணம் ஏதும் வாங்கிக் கொள்ள மாட்டேன்" என்று பிடிவாதமாகக் கூறினான்.

இந்த வழக்கு அவ்வூரிலுள்ள பஞ்சாயத்தார் மரியாதை இராமனிடம் சென்றது. மரியாதை இராமன் மிகத் திறமையான அறிவாற்றலும் சூழ்ச்சித் திறனும் படைத்தவர். மிகவும் நேர்மையானவர், தெய்வபக்தி மிகுந்தவர். நல்ல தீர்ப்பு வழங்குவதில் வல்லவர். யானைப்பாகன் கோவிந்தன், மரியாதை இராமனிடம் "ஐயா, இந்த வியாபாரி தம் மகள் திருமண விழாவில் ஊர்வலம் விடுவதற்காக என் யானையை இரவல் கேட்டார். நான் கொடுத்தேன். ஊர்வலத்தின் போது, யானை இறந்து விட்டது. அந்த யானையைத் திருப்பித் தரச் சொல்லுங்கள்".

வியாபாரி கதிரேசன் நீதிபதியிடம் "ஐயா, ஏதோ என் போதாத காலம் யானை இறந்துவிட்டது. தற்செயலாக இறந்து போன யானைக்குரிய விலையையாவது, மாற்றாக வேறு யானையாவது வாங்கித் தருகிறேன் என்று எத்தனையோ முறை கூறிவிட்டேன்.



ஆனால், பாகனோ எனக்கு அதே யானைதான் வேண்டுமென்று கூறுகின்றான். இறந்து போன யானையை யாரால் எழுப்பித் தர இயலும். நீங்கள் தான் ஒரு வழி கூற வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்.

வியாபாரி கூறியதிலிருந்து உண்மையை புரிந்து கொண்ட மரியாதை இராமன் இருவரையும் பார்த்து, "நீங்கள் நீதிமன்றத்திற்கு நாளை வாருங்கள்" என்று கூறி அனுப்பினார். எல்லோரும் சென்றபிறகு வியாபாரியைத் தனியே அழைத்து "நான் சொல்கிறபடி செய். யானைப் பாகனிடம் இவ்விவகாரம் குறித்துப் பேசித் தீர்ப்பதற்காக உனது வீட்டிற்கு வருமாறு அழைப்பு விடு. அவன் வரும் போது கதவை உள்தாளிடாமல் மூடி வைத்து விடு. கதவின் பின்புறமாக பெரிய பெரிய மண்பானைகளை அடுக்கி வைத்து விடு! நீ உள்ளே இருந்து கொண்டு அவனைக் கதவைத் திறந்து வீட்டிற்குள் வருமாறு சொல். அவனும் கதவைத் திறந்து கொண்டு உள்ளே வருவான். நீ அடுக்கி வைத்த பானைகள் உடைந்து உருளும். பின்னர், நடப்பதை நீதிமன்றத்தில் பார்த்துக் கொள்ளலாம்" என்றார்.

வியாபாரி கதிரேசனும் மரியாதை இராமன் சொல்லியபடி தன் வீட்டின் கதவிற்குப் பின்புறமாக, பழைய மண்பானைகளை அடுக்கி வைத்துவிட்டு கதவைத் தாளிடாமல் வீட்டினுள் காத்திருந்தார். கதிரேசனின் அழைப்பை ஏற்று, அவர் வீட்டிற்கு வந்த யானைப்பாகன் ஆத்திரத்துடன் கதவைத் தள்ளினான். கதவு வேகமாகத் திறந்து கொள்ள கதவின் பின்னால் அடுக்கி வைத்திருந்த பானைகள் அனைத்தும் கீழே விழுந்து உடைந்து நொறுங்கின.



அப்போது வீட்டுக்குள்ளிருந்த வியாபாரி கதிரேசன், "என்ன கோவிந்தா, இப்படி செய்துவிட்டாய்? எங்கள் வீட்டில் காலங்காலமாகப் போற்றி வைத்திருந்த தொன்மையான பானைகள் இவை. எல்லாவற்றையும் உடைத்து விட்டாயே, உன்னைச் சும்மா விடப் போவதில்லை. எனக்கு இதே பானைகளைத் திருப்பித் தர வேண்டும்" என்று கூக்குரலிட்டார்.

"அதெப்படி முடியும் வேண்டு மானால் நீங்கள் கொடுக்க வேண்டிய யானைக்குரிய பணத்தை கொடுங்கள், நான் பானைக்குரிய பணத்தை தந்து விடுகிறேன் என்றான்". எனக்கு என் பானைகள் தான் வேண்டும் என்று பிடிவாதமாகக் கூறினார் வியாபாரி. இருவரும் பஞ்சாயத்திற்குச் சென்றனர்.

இருவரிடமும் விசாரித்த நீதிபதி, மரியாதை இராமன் யானை இறந்ததற்கு அதே யானையை தர வேண்டியது நியாயமானது தான். அது போல பானைக்காரனுக்கு அதே பானையைத் தர வேண்டியது யானைக்காரனின் கடமை என்று கூறினார். யானைப்பாகனோ "அதெப்படி உடைந்த பானையைத் தர முடியும்?" என்று கூறினான். "அப்படியானால் நீ பானையைத் தர வேண்டாம். அவர் உனக்கு யானையைத் தர வேண்டியதில்லை".

"யானைக்கும் பானைக்கும் சரி" என்று தீர்ப்புக் கூறினார்.

## உரையாடலாம் வாங்க!

"யானைக்கும் பானைக்கும் சரி"என்ற கதையை உம் சொந்த நடையில் கூறுக.

## சிந்திக்கலாமா?

உன் நண்பன் உன்னைத் தவறாகப் புரிந்துகொண்டு உன் மீது சினம் கொண்டால் நீ என்ன செய்வாய்?

## வினாக்களுக்கு விடையளி

1. கதிரேசன் யானையை எதற்காக இரவல் கேட்டார்?
2. ஊர்வலத்திற்குச் சென்ற யானை என்னவாயிற்று?
3. மரியாதை இராமன் கதிரேசனைத் தனியே அழைத்து என்ன கூறினார்?
4. யானைக்கும் பானைக்கும் சரி என்ற கதை உணர்த்தும் நீதி என்ன?

## சிப்பிகளில் உள்ள எழுத்துகளைக் கொண்டு கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. வணிகர் ................................ நாட்டைச் சேர்ந்தவர்.
2. வியாபாரி, வணிகர் இருவரின் வழக்கை எதிர்கொண்டவர் ....................
3. திருமண ஊர்வலத்தில் ................................ இறந்து விட்டது.
4. ................................ கீழே விழுந்து நொறுங்கின.




## சொல்லிப் பழகுவோம்

1. உளி பெருகும் சிலை அழகு, அலை உலவும் கடல் அழகு.

2. கார் சீற நீர் சீறும் ஏர் கீற வேர் கீறும்.

3. பழுத்த கிழவி பலத்த மழையில் வழுக்கி பள்ளத்தில் விழுந்தாள்.

## சொற்களை முறைப்படுத்திச் சரியான தொடரமைத்து எழுதுக.




1. ............................................................ 2. ............................................................

3. ............................................................ 4. ............................................................

## குறிப்புகளைப் பயன்படுத்திக் கதை உருவாக்குக. பொருத்தமான தலைப்பிடுக.

புறாக்கள் - மரம் - வேட்டைக்காரன் - தானியங்கள் - வலை - ஒற்றுமை

## குறிப்புகளைக் கொண்டு கட்டத்திலிருந்து விடை காண்போமா?

| | | | | |
|---|---|---|---|---|
| | 1 | | | |
| | | | 2 | |
| 3 | | 4 | 5 | |
| | | | | |
| | | | | |
| | | | | |

### இடமிருந்து வலம்

1. “எதிரி” என்பதன் எதிர்ச்சொல்.
2. தும்பிக்கை உள்ள விலங்கு.
3. “நூல்” என்பதன் வேறு பெயர்.

### மேலிருந்து கீழ்

3. “இகழ்” என்பதன் எதிர்ச்சொல்.
4. தாகத்தை தீர்ப்பது.
5. கடலைக் கடக்க உதவுவது.

## செயல் திட்டம்

வார இதழ்கள், செய்தித்தாள்கள், தகவல் தொடர்பு கருவிகள் மூலம் கிடைக்கும் யானை பற்றிய செய்திகளைத் தொகுத்து, செய்தித்தொகுப்பு உருவாக்குக.

# 4 நன்னெறி



இன்சொலால் அன்றி இருநீர் வியனுலகம்
வன்சொலால் என்றும் மகிழாதே - பொன்செய்
அதிர்வளையாய் பொங்கா(து) அழல்கதிரால் தண்ணென்
கதிர்வரவால் பொங்கும் கடல்

- சிவப்பிரகாச சுவாமிகள்



## நூல் வெளி :



ஆசிரியர் : துறை மங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள்
பெற்றோர் : குமாரசாமி தேசிகர்
காலம் : தமது 32 - ம் வயதில் இயற்கை எய்தினார்
நூல்கள் : வேதாந்த சூடாமணி, சிவப்பிரகாச விசாகம், நெஞ்சு விடு தூது, மேலும் பல நூல்கள்.

## பாடல் பொருள்

பொன் போன்ற கதிர்களை உடைய கொதிக்கும் சூரியக் கதிர்களைக் கண்டு கடல் பொங்குவதில்லை. ஆனால் குளிர்ந்த ஒளியை உண்டாக்கும் நிலவின் ஒளியைக் கண்டு தான் கடல் பொங்கும். அதுபோல வன்மையான சொல்லைக் கண்டு இந்த நீர் சூழ்ந்த உலகத்தின் மக்கள் மகிழ்ச்சி அடைவதில்லை. மாறாக இன்சொல்லால் தான் மகிழ்கின்றனர். ஆகையால் இனிமையான சொற்களை மட்டுமே பேச வேண்டும் என்கிறார் ஆசிரியர்.

## உரையாடலாம் வாங்க!



- பாடலை உரிய ஓசை நயத்துடன் படித்து மகிழ்க.
- உன்னிடம் பிறர் எப்படிப் பேச வேண்டும் என எண்ணுகிறாய்? ஏன்?

## சிந்திக்கலாமா?



இன்சொற்களைப் பேசுவதால் நன்மையே விளையும் என்பதைப் பிறருக்கு எப்படி உணர்த்தலாம்?

## சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுவோமா?

1. இன்சொல் இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ................................

(அ) இன் + சொல் (ஆ) இனிமை + சொல்

(இ) இன்மை + சொல் (ஈ) இனிய + சொல்

2. அதிர்கின்ற வளை இச்சொற்களில் அதிர்கின்ற என்னும் சொல்லின் பொருள்

(அ) உடைகின்ற (ஆ) ஒலிக்கின்ற

(இ) ஒளிர்கின்ற (ஈ) வளைகின்ற

3. வியனுலகம் இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ................................

(அ) வியன் + உலகம் (ஆ) வியல் + உலகம்

(இ) விய + உலகம் (ஈ) வியன் + னுலகம்

## வினாக்களுக்கு விடையளி

1. உலகம் எப்போது மகிழும்? - நன்னெறிப்பாடல் மூலம் உணர்த்துக.
2. கடலின் அலைகள் எப்போது பொங்கி எழும்?

## பொருத்துக

| | | |
|---|---|---|
| இன்சொல் | - | கதிரவனின் ஒளி |
| வன்சொல் | - | நிலவின் ஒளி |
| அழல்கதிர் | - | கடுஞ்சொல் |
| தண்ணென் கதிர் | - | இனிய சொல் |

## குறிப்புகளைக் கொண்டு கட்டத்தை நிரப்புக.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1. | தென்னையில் கிடைக்கும் நீர் | ○ | | | | |
| 2. | இன்பம் என்ற வார்த்தையின் எதிர்ச்சொல் | | ○ | | | |
| 3. | தீயவை செய்தால் நரகம். நன்மை செய்தால் | ○ | | | | |
| 4. | தோகை விரிக்கும் | | | ○ | | |

வட்டத்தில் எழுதிய சொற்களைக் கட்டத்தில் எழுதிப் பாருங்கள்.
வன்சொல் - இச்சொல்லின் எதிர்ச்சொல் கிடைக்கும்.
இதுவே அனைவருக்கும் பிடிக்கும்.

| | | | |
|---|---|---|---|
| ○ | ○ | ○ | ○ |

## சிறு வட்டத்தில் உள்ள எழுத்தை முதலாகக் கொண்டு சொல் உருவாக்குக.




1. பாவை
2. பாகம்
3. ..............................
4. ..............................
5. ..............................
6. ..............................
7. ..............................
8. ..............................
9. ..............................
10. ..............................

### தெரிந்து கொள்வோம்

திருக்குறள்

இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று

- இனியவை கூறல், குறள் 100

### செயல் திட்டம்

இனியவை கூறல் என்னும் திருக்குறள் அதிகாரத்திலுள்ள குறட்பாக்களை எழுதி வருக.

# 5 பனிமலைப் பயணம்


ஓர் அடர்ந்த காட்டில் யானை, சிங்கம், முயல் ஒட்டகச்சிவிங்கி ஆகியன நண்பர்களாய் ஒற்றுமையுடன் வாழ்ந்து வந்தன.
அருகிலிருந்த பனிமலைக் காட்டில் பென்குயின் ஒன்று நண்பர்களுடன் வாழ்ந்து வந்தது.
வாருங்கள், பென்குயினாரே! உங்களை வரவேற்பதில் மகிழ்ச்சியடைகிறோம்.
மிக்க மகிழ்ச்சி. நண்பர்களே! அடுத்தவாரம் வீட்டில் பனிமலைத்திருவிழா. நீங்கள் அனைவரும் அவசியம் வந்து கலந்து கொள்ள வேண்டும்.
நாங்கள் அவசியம் வருகிறோம்.
நன்றி, நண்பர்களே!
அனைவரும் ஒரு படகில் புறப்பட்டனர்
ஏலேலோ ஐலசா
திடீரென்று ஆற்றின் வேகம் அதிகரித்து படகு ஒரு பக்கமாய்ச் சாய்கிறது.
ஐயோ! படகு சாய்கிறதே! ஆ! என்னவாயிற்று?
டேய் .... பசங்களா எங்கே போறீங்க?
அவர்களை ஒரு முதலை பார்த்தது


என் முதுகில் ஏறிக் கொள்ளுங்கள் உங்களைக் கரையில் விடுகிறேன்.
ஆ! நல்ல விருந்து ... இன்றைக்கு ஒரு பிடி பிடிச்சிட வேண்டியது தான்.
ஐயா, முதலையாரே... உங்கள் எண்ணம் எனக்குத் தெரியும் முதுகில் ஏற்றி எங்களைச் சாப்பிட நினைக்கிறீர்கள்.
கவனமாகக் கேளுங்கள். இப்படித்தான் ஒரு முதலை கடந்த வாரம், எங்களைப் போன்ற விலங்குகளை அடித்துச் சாப்பிட்டது.
அப்புறம் என்னவாயிற்று?
பிறகென்ன செரிமானம் ஆகாமல் இறந்தே போய்விட்டது. அதற்குத் தயார் என்றால் நீங்கள் தாராளமாக எங்களைச் சாப்பிடுங்கள்.
ம்... அதைப் பிறகு பார்த்துக் கொள்ளலாம். இப்போது பசிக்கிறது. இதோ சாப்பிடப் போகிறேன்.
முதலையாரே... இன்னுமொரு பிரச்சினையும் உள்ளது.
என்ன அது ... சீக்கிரம் சொல்
வழியில் பாம்பு கடித்தால் எங்களுக்கு விஷம் ஏறாமல் இருக்க நாங்கள் விஷ முறிவுச் செடிகளைத் தின்று வந்திருக்கிறோம். அதனால் எங்களை யார் கடித்தாலும் அல்லது நாங்கள் யாரைக் கடித்தாலும் அவர்கள் இறப்பது உறுதி.




## உரையாடலாம் வாங்க!

உமது நண்பரிடம் உமக்குப்பிடித்த, பிடிக்காத பண்புகளைப் பற்றி வகுப்பறையில் கலந்துரையாடுக.

**சிந்திக்கலாமா?**

பக்கத்து ஊருக்குச் செல்ல படகிலும் செல்லலாம், பேருந்திலும் செல்லலாம்... எதில் பயணம் செய்ய நீ விரும்புவாய், காரணம் என்ன?

## சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுவோமா?

1. "என் முதுகில் ஏறிக்கொள்ளுங்கள். உங்களை கரையில் விடுகிறேன்" - என்று கூறியது யார்? ....................

(அ) பெங்குயின் (ஆ) சிங்கம்
(இ) முயல் (ஈ) முதலை

2. விருந்துண்டு - இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ....................

(அ) விருந்து + துண்டு (ஆ) விருந் + துண்டு
(இ) விரு + ந்துண்டு (ஈ) விருந்து + உண்டு

3. பிறகென்ன - இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ....................

(அ) பிற + கென்ன (ஆ) பிறகெ + என்ன
(இ) பிறகு + என்ன (ஈ) பிறர்க்கு + என்ன?

4. இன்னும் + ஒரு இச்சொல்லைச் சேர்த்து எழுதக் கிடைப்பது ....................

(அ) இன்னும் ஒரு (ஆ) இன்னுமொரு
(இ) இன்னும்மொரு (ஈ) இன்னமும் ஒரு

5. புத்திக்கூர்மையாக செயல்பட்டது யார்? ....................

(அ) சிங்கம் (ஆ) முயல்
(இ) பென்குயின் (ஈ) யானை

## வினாக்களுக்கு விடையளி

1. முதலையிடம் பென்குயின் என்ன கூறியது?
2. பனிமலைக்கு எதற்காக விலங்குகள் சென்றன?
3. இக்கதையில் உனக்குப் பிடித்த விலங்கு எது? ஏன்?

## சூழ்நிலைக்கான உணர்வுகளைப் பொருத்துக.

| | |
|---|---|
| 1. பள்ளிக்கு நேரமாயிற்று. கிளம்பி ஓடு | - பாதுகாப்பு |
| 2. பாம்பு வருகிறதே! | - கேளிக்கை |
| 3. வாழ்க வளமுடன் | - அச்சம் |
| 4. கோமாளியின் நடனம் பார் | - வாழ்த்து |
| 5. எழுதுகோலை பத்திரமாக பார்த்துக்கொள் | - விரைவு |

**கீழேயுள்ளவற்றில் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து, உரிய சொற்களைக் கொண்டு நிரப்புக.**

1. .................................... அலைந்தான். ..........................................................................

2. .................................... விழித்தாள். ..........................................................................

3. .................................... தாள்கள். ..........................................................................

4. .................................... திறனாளி. ..........................................................................

5. .................................... தந்தை. ..........................................................................

6. .................................... வயல். ..........................................................................

( நெல், தேசத், மாற்றுத், செய்தித், தேடி, கண் )



## தமிழோடு விளையாடலாம்

ஒவ்வொரு சொல்லுக்கும் ஒவ்வொரு வட்டத்தை வண்ணமிடுக. வண்ண மாலையை அணிந்து கொள்ளுங்கள்.



| | | | | | |
|---|---|---|---|---|---|
| சு | வ | ண் | டி | சை | சி |
| ண் | டை | தி | க | கா | வ |
| ட | மா | ர | ம் | வ | ப் |
| ல் | ளி | வி | ந் | ல் | பு |
| வை | கை | ப் | பை | ய | ன் |

1. ........................................ 4. ........................................ 7. ........................................

2. ........................................ 5. ........................................ 8. ........................................

3. ........................................ 6. ........................................ 9. ........................................

நான் பெற்ற வண்ணமாலைகள் ..........................................................................

**சொல்லக் கேட்டு எழுதுக.**

1. திருவிழா 2. பனி மலைப் பயணம் 3. புத்திக் கூர்மை 4. ஆற்றின் வேகம்

5. விஷ முறிவு 6. செரிமானம் 7. பென்குயின் 8. ஒற்றுமை

9. தந்திரம் 10. விருந்து

## அகரவரிசைப்படுத்துக.

மகிழ்ச்சியாய்த் தாவத் தொடங்கு, சௌந்தர்யம் என்னும் அழகிய தேன்கூட்டைச் சென்றடையவாய்.

சாரல், சைவம், சோகம், சீப்பு, செம்பருத்தி, சேவல், சொந்தம், சௌந்தர்யம், சந்து, சூடம், சுமை, சிறகு



## கலையும் கைவண்ணமும்

### ஆடை செய்வோமா!



### செயல் திட்டம்

அறிவே துணை என்னும் நீதியை அறிவுறுத்தக்கூடிய கதைகளுள் இரண்டு எழுதி வருக.

# 6 ஆராய்ந்திட வேண்டும்



'யாரு?ஆதித்தனா! வா, தம்பி என்ன இன்று அதிகாலையிலேயே வந்து விட்டாயே.....!' ஆமாம் தாத்தா! நீங்கள் சொல்லும் கதைகள் எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. வாழ்க்கை நெறிகள் நிறைந்து இருக்கின்றன. வாழ்வில் எல்லோரும் கடைபிடிக்க வேண்டியன. மேலும் புதுக் கதைகளைக் கேட்கத் தூண்டுகின்றன. அந்த ஆவலில் காலையிலேயே வந்துவிட்டேன். சரி ஆதித்தன்! இன்று ஒரு அருமையான கதை சொல்கிறேன். கவனமாகக்கேள்.

உறையூர் என்ற நாட்டை ஒரு மன்னர் ஆண்டு வந்தார். மக்களிடம் அளவில்லா அன்பு கொண்டவர். நீதி, நேர்மையுடன் ஆட்சி செய்பவர். ஒரு நாள் தன் குதிரையில் அமர்ந்தபடி நகர்வலம் சென்றார். மக்கள் வாழும் நிலையையும் அதை மேலும் சிறப்புடன் அமைய என்ன செய்ய வேண்டும் என்பதைக் கண்டறியவும் தனது குதிரையில் பயணத்தைத் தொடர்ந்தார். மன்னரிடம் நீண்டநாள் பணியிலிருந்த அவரது குதிரையும் மன்னரைப் போலவே மிகவும் இரக்கக்குணம் கொண்டதாகக் காணப்பட்டது. மன்னரைச் சுமந்து வந்த குதிரை சுற்றும் முற்றும் தெருவைப் பார்த்த படியே வந்து கொண்டிருந்தது.

அது சமயம் தெரு நாயொன்று காலில் அடிபட்டு நொண்டி நடந்து சென்றதைப் பார்த்தது. பரிதாபப்பட்டது. அந்த நாய்க்கு ஏதாவது உதவி செய்ய வேண்டுமென்று எண்ணியது. அதனால் தன் கனைப்பொலியின் மூலம் மன்னருக்கு அந்த அடிபட்ட நொண்டி நாயின் நிலையினை அறிவுறுத்தியது. குதிரையின் எண்ணத்தைப் புரிந்து கொண்ட மன்னர் தன்னைப் போலவே தன் குதிரையும் இரக்கத்துடன் செயல்படுவதைக் கண்டு மகிழ்ச்சியடைந்தார்.

தன் பின்னால் வந்து கொண்டிருந்த காவலர்களிடம் அந்த நாயைத் தூக்கி தான் அமர்ந்திருக்கும் குதிரையின் மேல் தனக்கு முன்னே வைக்கச் சொன்னார். காவலர்களும் அவ்வாறே செய்தனர்.

மன்னர் முன்னே அமர்ந்து குதிரைச்சவாரி செய்து கொண்டிருந்த அந்த நாய் மிகவும் மகிழ்ச்சியடைந்தது. மன்னர் குதிரையில் வருவதைக் கண்ட மக்கள் அவருக்கு வணக்கம் தெரிவித்தார்கள். அது கண்ட நாய் உற்சாகம் கொண்டது. குதிரையில் வரும் தன்னைத்தான் மக்களெல்லாம் வணங்குகிறார்கள் என்று கர்வம் கொண்டது. என் அருகிலிருக்கும் மன்னன், என்னைச் சுமந்து வரும் குதிரை இவர்களையெல்லாம் விட நானே சிறந்தவனாகவும், உயர்ந்தவனாகவும் இருக்கிறேன். இந்த மக்கள் எல்லாம் என்னை வணங்குவது கண்டு எனக்கு அளவிற்கு மீறிய உற்சாகம் வருகின்றதே! என்ற மகிழ்ச்சியில் தன்னையே மறந்து தன் தலையைத் தூக்கியபடி ‘லொள்’ ‘லொள்’ என்று குரைத்தது.

நாயின் இச்செயலைக் கவனித்த குதிரை ‘ஏய் நாயே! அமைதியாக இரு. நீ குரைத்துக் கொண்டே வந்தால், எல்லோரும் வெறுப்படைவார்கள். அதன் பிறகு, நீ என் மீது சவாரி செய்ய முடியாது.’ என்றது. ‘குதிரையே இந்த மக்கள் என்னை வணங்குவது கண்டு உனக்கு என் மீது பொறாமை ஏற்பட்டு விட்டது. அதனால் தான் நீ என்னை மட்டம் தட்டுகிறாய்’ என்றது நாய்.



நாயே! ‘குடிமக்கள் யாரும் உன்னைப் பார்த்து வணங்கவில்லை. அவர்கள் மன்னரைப் பார்த்து வணங்குகிறார்கள். மன்னர் முன்னே அமர்ந்திருக்கின்ற நீ இதையெல்லாம் பார்த்து விட்டு உனக்குக் கிடைத்த மரியாதையாக நினைத்துக் கொண்டு உற்சாகமடைகிறாய். இனிமேலாவது உண்மை நிலையைப் புரிந்துக் கொண்டு அமைதியாய் இரு’ என்றது குதிரை. தன் மீது கொண்ட பொறாமையால் தான் குதிரை இவ்வாறு எச்சரிக்கிறது என்று எண்ணிய நாய் உன் அறிவுரை எனக்குத் தேவையில்லை! என்றபடி மேலும் சத்தமாகக் குரைத்தது அந்த நாய். இதனால் எரிச்சலடைந்த மன்னரின் காவலர்கள் அந்த நாயைக் கீழே இறக்கி விட்டு அடித்து விரட்டினர். நொண்டி நொண்டி ஓடிய நாய் சற்று தூரம் சென்று திரும்பிப் பார்த்தது.

தான் இல்லாத போதும், குடிமக்கள் மன்னரை வணங்க, மன்னரும் மக்களுக்குப் பதில் வணக்கம் தெரிவித்துக் கொண்டிருந்தார். இந்தக் காட்சியைப் பார்த்த பின் தான் நாய்க்கு உண்மை புரிந்தது. தன்னுடைய தவறினை நினைத்து வருந்தியது.

‘ஆராய்ந்திடாமல் முடிவெடுத்தால் என்ன நடக்கும் என்பதை இக்கதை மூலம் தெரிந்து கொண்டிருப்பீர்கள்’ என்றார் தாத்தா.

**உரையாடலாம் வாங்க!**



கதையை உம் சொந்த நடையில் கூறுக.
ஆராய்ந்து செயல்படுவதால் கிடைக்கும் நன்மைகளைக் கூறுக.

**சிந்திக்கலாமா?**



நீ செய்யாத செயலுக்கு உனக்கு ஒருவர் நன்றி கூறினால் அல்லது பரிசு அளித்தால் அவ்வேளையில் நீ என்ன செய்வாய்?

## பொருள் கூறுக.

1. பரிதாபப்பட்டது 2. உற்சாகம் 3. நகர்வலம்

## பிரித்து எழுதுக.

1. நாயொன்று 2. கனைப்பொலி 3. மக்களெல்லாம்
4. முடிவெடுத்தால் 5. வெறுப்படைவார்கள்

## நிறுத்தக்குறிகளை சரியாக இடுக.

1. யாரு ஆதித்தனா வா தம்பி என்ன இன்று அதிகாலையிலேயே வந்து விட்டாயே
2. எனக்கு அளவிற்கு மீறிய உற்சாகம் வருகின்றதே
3. நாயே குடிமக்கள் யாரும் உன்னைப் பார்த்து வணங்கவில்லை

## சொல்லக் கேட்டு எழுதுக.

1. அதிகாலை 2. அளவில்லா அன்பு 3. இரக்ககுணம்
4. குதிரைச்சவாரி 5. குடிமக்கள்

## சொற்றொடரில் அமைத்து எழுதுக.

1. துள்ளித்துள்ளி 2. வேகவேகமாய் 3. நீள நீளமாய்
4. தேம்பித் தேம்பி 5. நடந்து நடந்து

## குறிப்பைப் படி! விடையைக் கொடு!

1. மரத்தில் இருப்பது இலை. கோவிலில் உள்ளது சிலை.
   வேடர்கள் விரிப்பது வலை. பெரிய குன்றுகள் ........................................
2. மழைக்கு விரிப்பது குடை. பெண்களின் பின்னல் சடை.
   தராசில் நிறுப்பது எடை. பொருட்கள் விற்கும் இடம்........................................
3. மழைக்கு மற்றொரு பெயர் மாரி. ஏழு வள்ளல்களில் ஒருவர் பாரி.
   நீர் தேங்கியிருக்கும் ஒரு இடம் ஏரி. பாம்பின் எதிரி........................................

## சொற்களிலுள்ள பிழைகளைத் திருத்தி எழுதுக.

1. வால்க்கை நெறிகள் ........................................
2. அறுமையாண கதை. ........................................
3. நீன்டநால் பனி ........................................
4. வனங்குகிறார்கள் ........................................
5. காவளர்கள் ........................................

## வினாக்களுக்கு விடையளிக்க.

1. குதிரை ஏன் நாய்க்கு உதவி செய்ய நினைத்தது?
2. காவலர்கள், குதிரைமீது இருந்த நாயை ஏன் கீழே இறக்கிவிட்டனர்?

## கலையும், கைவண்ணமும்

பயன்படுத்திய காகிதத்தில், உறை தயாரிக்கலாமா?

**தேவையான பொருள்கள் :** பயன்படுத்திய தாள்கள், பசை



## விலங்குகளுக்குரிய ஒலிப்புகளை வட்டமிடுக







| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| ல | க | க | னை | க் | கு | ம் | ன | ர |
| வ | ழ | மு | ழ | ங் | கு | ம் | அ | ம் |
| ந | டை | னை | வி | மு | ம் | தி | ப | று |
| கு | ரை | க் | கு | ம் | சை | றா | மு | ளி |
| ம | று | கு | ரு | வி | லு | கே | ள் | பி |
| டு | ன | ம் | மு | று | உ | உ | டை | ழ |





## தெரிந்து கொள்வோம்

| தமிழில் மூவினம் | தமிழும் மூன்றும் | |
|---|---|---|
| த - வல்லினம் | முத்தமிழ் | - இயல், இசை, நாடகம் |
| மி - மெல்லினம் | முச்சங்கம் | - முதல், இடை, கடை |
| ழ் - இடையினம் | முக்காலம் | - இறப்பு, நிகழ்வு, எதிர்வு |
| | முப்பொருள் | - அறம், பொருள், இன்பம் |
| | மூவிடம் | - தன்மை, முன்னிலை, படர்க்கை |

## செயல் திட்டம்

பிறர் பாராட்டுவதற்குரிய நல்ல செயல்கள் எவையெவை என உன் வீட்டில் உள்ளவர்களிடம் கேட்டு எழுதி வருக.

## காலம் ( இலக்கணம் )

ஒரு வாக்கியத்தில் உள்ள செயல் எப்பொழுது நடந்தது என்பதை உணர்த்தும் இலக்கணக்குறி காலம் ஆகும். காலம் மூன்று வகைப்படும்.

- நிகழ் காலம்
- இறந்த காலம்
- எதிர் காலம்



நடந்து கொண்டிருக்கும் செயல் நிகழ்காலம்



நடந்து முடிந்த செயல் இறந்தகாலம்



நடக்கப் போகும் செயல் எதிர்காலம்

### எடுத்துக்காட்டு

நான் கால்பந்து ஆடுகிறேன் ( நிகழ் காலம் )

நான் ஓட்டப்பந்தயம் ஓடினேன் ( இறந்த காலம் )

நான் கூடைப்பந்து விளையாடப்போகிறேன் ( எதிர் காலம் )

## மேற்கண்ட எடுத்துக்காட்டைப்போல் எழுதுக.

| வ.எண். | தொடர் | இறந்த காலம் | நிகழ் காலம் | எதிர் காலம் |
|---|---|---|---|---|
| 1. | கமலா பூ ..................... (தொடு) | | | |
| 2. | ஆடு புல் ..................... (மேய்) | | | |
| 3. | நாங்கள் படம் ............... (வரை) | | | |
| 4. | மதன் போட்டியில் ......... (வெல்) | | | |
| 5. | மயில்கள் நடனம் ......... (ஆடு) | | | |

## அட்டவணையில் விடுபட்ட இடங்களை நிரப்புக.

| வ.எண். | வினைச்சொல் | இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
|---|---|---|---|---|
| 1. | செய் | | செய்கின்றான் | |
| 2. | | பறந்தது | | |
| 3. | | | | படிப்பான் |
| 4. | கேள் | கேட்டது | | |
| 5. | | | | சொல்வார்கள் |

## கீழ்க்காணும் படங்களுக்குப் பொருத்தமான காலங்களைப் பயன்படுத்தித் தொடர் எழுதுக.



ரவி மரத்தில் ஏறுகிறான்.



.............................................



.............................................



.............................................



.............................................



.............................................

# 7 திருக்குறள் கதைகள்

## பொறுமையும் பொறுப்பும்



தாமஸ்ஆல்வாஎடிசன் புகழ்பெற்ற அறிவியல் அறிஞர். ஒரு அமெரிக்க கண்டுபிடிப்பாளரும், தொழிலதிபரும் ஆவார். எடிசனுக்குத் தாம் வசித்து வந்த நியூயார்க் நகரின் வீடுகளிலும், வீதிகளிலும் மின்சார விளக்கு ஒளிவீச வேண்டும் என்பது ஆசை. ஆனால் கேஸ் மற்றும் எண்ணெய் விளக்குகளை மட்டும் உபயோகப்படுத்திக் கொண்டிருந்த காலத்தில் அவரது ஆசை நிறைவேறும் என்பதை அவரைத் தவிர மற்ற விஞ்ஞானிகள் உட்பட யாரும் நம்பவில்லை. ஆனால் அவரது கடின உழைப்பால் கடைசியில் அவர் கனவு நனவாகியது. உலகிலேயே மின் விளக்குகளால் ஒளி பெற்ற முதல் நகரம் என்ற பெயரை நியூயார்க் நகரம் பெற்றது. அவரைப் பாராட்டச் சென்ற பத்திரிக்கையாளர்களும், விஞ்ஞானிகளும் அவரது மகத்தான ஆராய்ச்சி வெற்றி குறித்து கருத்துக் கேட்டபோது அவர் தமது ஆராய்ச்சிக்கூடத்தில் மற்றொரு ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தார். நேற்றைய கண்டுபிடிப்பைப் பற்றி பேசி இன்றைய நேரத்தை நான் வீணடிக்க விரும்பவில்லை என்று புன்னகையுடன் அவர்களுக்குப் பதிலளித்தார்.

எடிசனின் வெற்றியில் ஒரு சதவீதம் அறிவு, 99 சதவீதம் உழைப்பு என்ற பொன்மொழி பிரசித்தமானது. விஞ்ஞானி தாமஸ்ஆல்வாஎடிசன் ஆயிரம் முறைகளுக்கு மேல் தோல்வி கண்டு, தனது விடாமுயற்சியால் மின்சார பல்பைக் கண்டுபிடித்தார். தனது நண்பர்களுக்கும், சக விஞ்ஞானிகளுக்கும் மின்சார பல்பை ஒளிர வைத்துக் காட்டுவதற்காக அவர், ஒரு சந்திப்பு நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்தார். அவரது ஆய்வகத்தின் மேல் தளத்தில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது. எடிசன், தனது உதவியாளரை அழைத்து, மின்சார பல்பை மேல் தளத்திற்குக் கொண்டு வரச் சொன்னார். பல்பை கொண்டு வரும் பொழுது, அது கை தவறி விழுந்து உடைந்து விட்டது.

ஆவலுடன் காத்திருந்த அனைவரும் அதிர்ச்சி அடைந்தார்கள். உதவியாளர் பதறிப்போனார். ஆனால் எடிசன் சற்றும் மனம் கலங்கவில்லை. ஆயிரம் தோல்விகளைச் சந்தித்து வெற்றி கண்ட அவருக்கு, மீண்டும் மின்சார பல்பை உருவாக்குவது எளிதாக இருந்தது. சிறிது முயற்சிக்குப் பின் மறுபடியும் ஒரு பல்பை உருவாக்கினார். பல்பை திரும்பவும் அதே உதவியாளரிடமே கொடுத்து மேலே எடுத்து வரச் சொன்னார். பல்பை கைதவறிப் போட்டு உடைத்தவனிடமே மீண்டும் அந்த வேலையைக் கொடுக்கிறீர்களே? என்று சிலர் எடிசனிடம் கேட்டே விட்டனர்.

எடிசன் அதற்கு, பல்பு உடைந்தால் என்னால் திரும்பவும் செய்து கொள்ள முடியும். ஆனால் அவரது மனதைக் காயப்படுத்தி விட்டால் அதை என்னால் சரி செய்ய முடியுமா? அதனால் தான் திரும்பவும் அப்பணியை அவனிடமே கொடுத்தேன் என்றார். அவன் தனது பொறுப்பையும், எனது நம்பிக்கையையும் உணர்ந்து கூடுதல் கவனத்துடன் பணிபுரிவார் என்றார். எடிசனுக்கு வெற்றியைப் பெற்றுத் தந்த பொறுமை உணர்ச்சியின் எல்லையை அப்போது தான் மற்றவர்கள் முழுமையாக உணர்ந்தனர்.

நிறையுடைமை நீங்காமை வேண்டின் பொறையுடைமை
போற்றி ஒழுகப் படும்.

- பொறையுடைமை, குறள்.154

நிறை உடையவராக இருக்கும் தன்மை தம்மைவிட்டு நீங்காமலிருக்க வேண்டுமானால், பொறுமையைப் போற்றி ஒழுக வேண்டும்.



அரியலூர் என்ற கிராமத்தில் உதயகுமார், அவரது மனைவியுடன் வசித்து வந்தார். அவர்கள் ஒரு வெள்ளைப் பசுவை வளர்த்து வந்தனர். வேளா வேளைக்கு நல்ல தீனி கொடுத்து மிகவும் பாசமாக வளர்த்து வந்தனர். கடந்த இரண்டு நாட்களாக அந்த வெள்ளைப் பசு சரியாகத் தீவனம் திண்ணாமல் சுணங்கிப் போய் இருந்தது.

உதயகுமாரின் மனைவி, பக்கத்து தெருவில் உங்கள் நண்பர் மாணிக்கம் வீட்டிலேயும், அவருடைய பசுவும் இப்படித்தான் இருந்ததாம். அவரிடம் போய் அப்பசுவிற்கு என்ன வைத்தியம் செய்தார்கள்? என்று கேட்டு வரச் சொன்னாள்.

உதயகுமார் உடனே மாணிக்கம் வீட்டிற்கு சென்றார். உங்கள் பசு இரண்டு நாட்களாக சரியாகத் தீனி திண்ணாமல் சுணங்கிப் போய் இருந்ததா? என்று கேட்டார். மாணிக்கம் ஆமாம் என்றார். அப்படியானால் அப்பசுவிற்கு என்ன செய்தீர்கள்? என்று கேட்டார். அரைலிட்டர் வேப்பெண்ணையை இலேசாகச் சுட வைத்து பசுமாட்டுவாயில் ஊற்றினேன் என்று சொன்னார் மாணிக்கம்.



நன்றி என்று சொல்லிவிட்டு வீட்டிற்கு வந்து அதேபோல் அரைலிட்டர் வேப்பெண்ணையை இலேசாகச் சுட வைத்து பசுமாட்டு வாயில் ஊற்றினார். ஆனால் அவர்களுடைய பாசமான பசு அரை மணி நேரம் கழித்து இறந்து போனது. உதயகுமார் உடனே மாணிக்கத்தின் வீட்டிற்கு ஓடினார். மாணிக்கம், நீங்க சொன்ன மாதிரியே அரை லிட்டர் வேப்பெண்ணையைச் சுட வைத்து பசுவின் வாயில் ஊற்றினேன். பசு அரை மணி நேரத்தில் இறந்து போச்சே? என்றான். அப்படியா! என் பசு கூடத் தான் அரை மணி நேரத்தில் செத்துப் போச்சு என்றார் மாணிக்கம்.

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு.

- அறிவுடைமை, குறள்.423

எப்பொருளை யார் யாரிடம் கேட்டாலும், கேட்டவாறே எடுத்துக் கொள்ளாமல் அப்பொருளின் உண்மையான பயனைக் காணவல்லது அறிவு.

## குற்றமும் குறையும்



கல்லல் என்ற கிராமத்தில் ஒரு சாமியார் இருந்தார். அவர் சாதாரண சாமியாரைப் போல இல்லாமல் பெரிய ஞானியாக இருந்தார். பல ஊர்களிலிருந்தும் மக்கள் தங்கள் பிரச்சனைகளோடு வந்தனர். அவர் அதற்கான தீர்வை எடுத்துரைத்தார்.

ஒரு நாள் ஒரு பெண் வந்தாள். அவள் மாமியார் எப்போதும் சண்டை போட்டுக்கொண்டே இருப்பதாகவும், அது தனக்கு எரிச்சலையும், மனஉளைச்சலையும் ஏற்படுத்துகின்றது என்றும் சொன்னாள். சாமியார் அவளிடம் ஒரு சிறிய சீசா நிறையத்தண்ணீர் கொடுத்துச் சொன்னார். இது மந்திரத் தண்ணீர். எப்போது சண்டை தொடங்கினாலும், இதில் கொஞ்சம் உன் வாயில் ஊற்றிக்கொண்டு, விழுங்காமல் உன் மாமியார் சத்தம் போட்டு முடியும் வரை அமைதியாக இரு. பின்னர் விழுங்கி விடு. அதைப் பெற்றுக் கொண்டு அவள் போய் விட்டாள்.

சில நாட்கள் சென்றன. அந்தப் பெண் மீண்டும் சாமியாரிடம் வந்தாள். சாமி! அந்தத் தண்ணீரின் மகிமையே மகிமை. நீங்கள் சொன்ன படியே செய்தேன். இப்போது என் மாமியாருடனான சண்டை வெகுவாகக் குறைந்துவிட்டது. சாமியார் சிரித்துக்கொண்டார். சண்டையைக் குறைத்தது தண்ணீர்தான். ஆனால், மகிமையால் அல்ல. அவள் வாயைத் திறக்க முடியாமல் அது செய்ததனால்! சிறிது பொறுமை அது பெரிய பலனைத் தந்தது. இது தெரிந்திருந்தாலும் நம்மால் பொறுமை காக்க முடிவதில்லை. எந்த ஒரு நிகழ்ச்சிக்கும் உடன் எதிர்ச்செயலாற்றி விடுகிறோம்.

உங்கள் எல்லோருக்கும் பஞ்சபாண்டவர்களில் ஒருவரான சகாதேவனைத் தெரியும். சகாதேவன், சோதிட சாத்திரத்தில் வல்லவன். நடக்க இருப்பதை முன் கூட்டியே அறியும் வல்லமை பெற்றவன். அவன் நடக்கப்போகும் நிகழ்வுகளை எடுத்துரைத்திருந்தால், பாஞ்சாலி ஐவருக்கும் மனைவியாக இருக்க நேர்ந்திராது. சூதாட்டம் இல்லை. துகிலுரிதல் இல்லை. வனவாசம் இல்லை. பாரதப்போர் இல்லை. ஆனால் அவன் சொல்லவில்லை ஏன்? அவனாகவே முன்வந்து ஏதாவது வருவதுரைத்தால் அவன் தலைசிதறும் என்பது விதி. அதுபோல் நமக்கும் சாபம் ஏதாவது இருந்தால் பொறுமை காப்போமோ என்னவோ? எனவே எந்த நேரத்திலும் பொறுமையாக இருக்கக் கற்றுக் கொள்ளுங்கள். பல நேரங்களில் மந்திரத் தண்ணீர் இல்லாமலே வாயை மூடிக் கொண்டிருக்கப் பழகுங்கள். வள்ளுவர் சொல்கிறார்,

யாகாவார் ஆயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு.

- அடக்கமுடைமை, குறள்.127

பொருள் :

எதைக் காக்க முடியாதவரானாலும், நாவையாவது காக்க வேண்டும்; காக்கத் தவறினால் சொல் குற்றத்தில் அகப்பட்டுத் துன்புறுவர்.

எனவே யோசித்துப் பேசுங்கள்.

கோபம் வரும் போது பேச்சைத் தள்ளிப் போடுங்கள். நலமோடு வாழுங்கள்.



கோபிநாத் ஒரு முன்கோபி. எடுத்ததெற்கெல்லாம் கோபப்படுவார். அலுவலகத்தில் தனக்குக் கீழ் வேலை செய்பவர்களிடம் குறை கண்டுபிடித்துக் கொண்டே இருப்பார். சின்னச்சின்னத் தவறுக்குக்கூட காட்டுக்கூச்சல் போடுவார். அவரது நண்பர்கள் அவருடைய நிலைமையைக் கண்டு நல்ல மருத்துவரிடம் அவரது உடலைப் பரிசோதிக்கச் சொன்னார்கள். கோபிநாத் அரைமனதுடன் மருத்துவரைச் சந்தித்தார்.

"மருத்துவர் ஐயா! வணக்கம்", "வாங்க கோபிநாத், உங்கள் உடம்பிற்கு என்ன?" என்றார். ஒன்றுமில்லை சின்னச் சின்ன நிகழ்வுகளுக்கெல்லாம் கோபம் வருகிறது. அடக்க முடியவில்லை. அதுதான் பிரச்சனை. "சரி, இரத்த அழுத்தம் அதிகமிருக்கும், சோதனை செய்து விடலாம்". சோதனை முடிந்தது. உங்களுக்கு இரத்த அழுத்தம் ரொம்ப அதிகமாக உள்ளது. "எவ்வளவு நாளா இந்தப் பிரச்சனை?" தெரியவில்லை ஐயா! அதிகமாகக் கோபம் வரும்.

கோபம் வந்தால் என்ன செய்வீர்கள்? வாய்க்கு வந்தபடி திட்டுவேன். அலுவலகத்தில் கோபம் வருமா? "ரொம்ப". அதனாலே பிரச்சனைகள் வருமே? "வரும்". அதை வீட்டில் காட்டுவீங்களா? காட்டித்தானே ஆகனும்? அப்போ வீட்டிலே சண்டை வருமா? வரும். ஐயா! நீங்கள் எதற்கு என் வீட்டுப் பிரச்சனைகளைக் கேட்கிறீர்கள்? என்று மருத்துவரையும் கோபித்தார் கோபிநாத்.

உங்களுக்கு, ‘ஹைபர்டென்ஷன்’ என்ற இரத்தஅழுத்தம் இருக்கிறது. நான் எழுதித்தரும் மருந்தை வாங்கிக் காலை, மாலை சாப்பிடுங்கள். சாப்பாட்டில் உப்பைக் குறையுங்கள். உங்கள் பிரச்சனை முடிவுக்கு வரும் என்றார் மருத்துவர்.

வருடங்கள் ஓடின. கோபிநாத்திற்கு இப்பொழுது வயது 60. கோபமும் குறையவில்லை. நோயும் கூடிற்று. இப்போது இரத்தக் கொதிப்பு, தூக்கமின்மை, குடல்புண், கொஞ்சம் இதய நோய்.

ஒருநாள் வாடிக்கையாளர் ஒருவரிடம் அலைபேசியில், கோபம் மிகக் கொண்டு வாய்க்கு வந்தபடி பேச, அவர் இவரை ஏகவசனத்தில் ஏச, எல்லாம் சேர்ந்து மயக்கம் வந்து, அப்படியே விழுந்து விட்டார். மூக்கில் இரத்தம் வழிய பக்கவாதம் என்று உடனே பெரிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். பத்து நாள் கழிந்தது, இன்னும் பேச்சு வரவில்லை. கை, கால்களை அசைக்க முடியவில்லை. கண்மூடிப் படுத்திருந்தவரைக்காண வந்த அவரது பெரிய பெண் ஊர்வசியும், இரண்டாவது பெண் மாலாவும் அப்பா! அப்பா! என்று அழைத்தனர். கோபிநாத்தின் முகத்தில் எந்த மாற்றமும் இல்லை மூடிய கண்கள் மூடியபடியே இருந்தது. "பாவம்பா நீ! உடம்பு இப்படி இளைச்சு போச்சே!" என்று அனுதாபப்பட்டனர். சற்று நேரம் கழித்து சகோதரிகள் வேறு கதை பேசினர். கோபிநாத்திற்கு அவர்கள் பேசியது அனைத்தும் காதில் விழுந்தது.

அப்பா மயக்கமாக இருக்கிறார் என்ற தைரியத்தில் "ஏய் மாலா, அப்பாவைப் பாரு கையெல்லாம் இழுத்துக்கிட்டு" - ஊர்வசி கிழத்துக்கு இதுவும் வேணும் இன்னமும் வேணுமடி.

நம்ம அம்மாவை "என்னபாடு படுத்தியிருக்கிறார்." அம்மா அழாத நாளே இல்லை தெரியுமா? இந்த அப்பாவுக்கு கோபத்திலே என்ன பண்றோம்னே தெரியாது. வா! நாம் வீட்டிற்கு போவோம். அப்பாவைச் செவிலியர்கள் பார்த்துக் கொள்வர்.

மகள்களின் உரையாடலைக் கேட்டுக் கொண்டிருந்த கோபிநாத்திற்கு வருத்தம் தாங்க முடியவில்லை. கண்களில் நீர் வழிய ஆரம்பித்தது. நேரம் காலம் பார்க்காமல் இந்த குடும்பத்திற்காக உழைத்தேன்? இவ்வளவு சொத்து சேர்த்தேன். எல்லாம் இவர்களுக்குத் தானே! என்னை இப்படி உதறிவிட்டு போறாங்களே! இவையெல்லாம் நம்ம கோபத்தினால் தானே! எல்லோரையும் இழந்துவிட்டோமே! எனக்கு இப்போது யாரும் இல்லையே! "வயதானால், பணம் மட்டுமே வாழ்க்கையில்லை. உறவுகள் வேண்டும். புரிந்தது. இனிமேலாவது நம்மை மாற்றிக் கொள்ள வேண்டும்" என்று முடிவெடுத்தார்.

ஒரு மாதம் கழித்து உடல் தேறி கோபிநாத் வீட்டிற்கு வந்தார். மருத்துவர், இனிமேல் நீங்க கோபமே படக்கூடாது. இன்னொரு முறை பக்கவாதம் வந்தால் மிகவும் கடுமையாயிருக்கும், என எச்சரித்தார். இப்போதெல்லாம் கோபிநாத் மனைவியிடமும், மற்றவர்களிடமும் மிக மிக அன்பாக இருக்கிறார். மகள்களிடம் மிகக் கனிவோடு நடந்து கொள்கிறார். பெரியமகள் ஊர்வசியின் குழந்தைகளுடன் எந்நேரமும் விளையாட்டுத்தான். கொஞ்சம் கொஞ்சமாக எல்லோரும் அவரிடம் நேசமாகப் பழக ஆரம்பித்தனர். சுற்றம் கூடியது. கோபிநாத் வாழ்க்கையில் இன்பம் பெருகியது.

தன்னைத்தான் காக்கின் சினம்காக்க காவாக்கால்
தன்னையே கொல்லுஞ் சினம்.

- வெகுளாமை, குறள்.305

ஒருவன் தன்னைத் தானே காத்துக் கொள்ள வேண்டுவனாயின், சினம் தோன்றாமல் காக்க வேண்டும். தவறினால் அந்தச் சினம் அவனை அழித்து விடும்.

**உரையாடலாம் வாங்க!**



நாவைக் காக்காவிட்டால் ஏற்படும் துன்பம் குறித்துப் பேசுக.

கதையில் ஒன்றைத் தெரிவு செய்து நண்பர்களுடன் இணைந்து நாடகமாக நடித்துக் காட்டுக.



**சிந்திக்கலாமா?**

அனுவும், பானுவும் சாலையைக் கடக்க, நின்று கொண்டு இருந்தனர். அப்போது மஞ்சள் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. அனு சாலையைக் கடக்கத் தொடங்கினாள். பானு, பச்சை விளக்கு ஒளிர்ந்தால் மட்டுமே கடக்க வேண்டும். பொறுமையாக இரு என்றாள். எது சரியான செயல்?

## சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுவோமா?

1. பொறை என்பதன் பொருள் ..................

(அ) முழுமை (ஆ) வளமை (இ) பொறுமை (ஈ) பெருமை

2. நிறையுடைமை இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ..................

(அ) நிறை + யுடைமை (ஆ) நிறை + உடைமை (இ) நிறைய + உடைமை (ஈ) நிறையும் + உடைமை

3 மெய் + பொருள் இச்சொற்களைச் சேர்த்து எழுதக் கிடைப்பது ..................

(அ) மெய்பொருள் (ஆ) மெய்யானபொருள் (இ) மெய்ப்பொருள் (ஈ) மெய்யாய்ப்பொருள்

4 வெகுளாமை இச்சொல்லின் பொருள் ..................

(அ) அன்பு இல்லாமை (ஆ) பொறாமை கொள்ளாமை (இ) சினம் கொள்ளாமை (ஈ) பொறுமை இல்லாமை

5. போற்றி ஒழுகப்படும் பண்பு ..................

(அ) சினம் (ஆ) பொறையுடைமை (இ) அடக்கமில்லாமை (ஈ) அறிவில்லாமை

## வினாக்களுக்கு விடையளி

1. பொறையுடைமை எப்போது போற்றப்படும்?
2. மெய்ப்பொருள் காண்பதே அறிவு என வள்ளுவர் கூறக் காரணம் என்ன?
3. நாவைக் காக்காவிடில் ஏற்படும் துன்பம் என்ன?
4. சினம் எப்போது ஒருவரை அழிக்கும்?
5. நீங்கள் படித்த திருக்குறள் கதைகளுள் உங்களுக்குப் பிடித்த கதை எது? ஏன்?

## பொருத்துக

1. பொறை - சொல்குற்றம்
2. மெய்ப்பொருள் - துன்பப்படுவர்
3. காவாக்கால் - பொறுமை
4. சோகாப்பர் - காக்காவிட்டால்
5. சொல்லிழுக்கு - உண்மைப்பொருள்

## பொருத்தமான சொல்லைத் தேர்ந்தெடுத்துத் தொடரை நிரப்புக.

1. ஆசிரியர்கள் மாணவர்களுக்கு ................................ ( அக்கரை / அக்கறை ) யுடன் பாடம் கற்பித்தனர்.
2. நாம் ஏழைகளிடம் ........................... ( இரக்கம் / இறக்கம்) காட்ட வேண்டும்.
3. வாசலைக் கூட்டி தண்ணீர் தெளித்து ........ ( கோலம் இடு / கோளம் இடு )
4. பந்து பார்வையாளரை நோக்கிப் .................................( பரந்தது / பறந்தது )
5. நான் ..................................( தீபாவலி / தீபாவளி )க்கு பட்டாசு வாங்கினேன்.



### தமிழோடு விளையாடலாம்

பொருத்தமான வினாச்சொல்லை எடுத்து வினாத்தொடரை முழுமைப்படுத்துக.

1. ஓவியத்தை வரைந்தது ..........................................?
2. நீ .......................................... சாப்பிட்டாய்?
3. உன் சகோதரர்கள் ..........................................பேர்?
4. உன் அம்மா .......................................... அப்பாவுடன் ஊருக்கு செல்லவில்லை?
5. .......................................... நாளை பள்ளி விடுமுறை?
6. இது .......................................... சட்டை?
7. சாந்தி .......................................... கொண்டு அடித்தாள்?
8. உன் கை விரல்கள் ..........................................?
9. உனக்குப் பிடித்த ஊர் ..........................................?
10. நீ .......................................... மருத்துவமனை சென்றாய்?

- என்ன
- ஏன்
- எத்தனை
- யார்
- எத்தனை
- யாருடைய
- எதனைக்
- எதற்காக
- எது
- எதற்காக

## நமக்குத் தேவையான பண்புகளைத் தேர்ந்தெடுப்போமா?

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ | ன் | பு | ம் | வ | க |
| ட | பொ | வு | ன | சை | ல் |
| க் | ஈ | றி | சி | பொ | லா |
| க | கை | அ | வா | ய் | மை |
| ம் | க | க் | மு | ஒ | ரு |
| செ | ய் | ந் | ந | ன் | றி |

அன்பு ------------------------- -------------------------

------------------------- -------------------------

------------------------- -------------------------

------------------------- -------------------------

## கலையும், கைவண்ணமும்

இதழ்களுக்கு மஞ்சள் தூள், விதைகளுக்கு உலர்ந்த தேயிலைத்தூள் பயன்படுத்தி அழகாக்குக.



### தெரிந்து கொள்வோம்

திருக்குறள் முதன்முதலில் அச்சிடப்பட்ட ஆண்டு 1812.

திருக்குறள் அகர எழுத்தில் தொடங்கி னகர எழுத்தில் முடிகிறது.

திருக்குறளில் இடம்பெறும் இருமலர்கள் அனிச்சம், குவளை.

### செயல் திட்டம்

நீங்கள் நன்கு அறிந்த திருக்குறளுக்கு உம் சொந்த நடையில் கதை எழுதி வருக.

# 8 பசுவுக்குக் கிடைத்த நீதி

( நாடகம் )

**முன்கதைச் சுருக்கம் :**

மனுநீதிச்சோழன் திருவாரூரில் இருந்து கொண்டு சோழ நாட்டை ஆண்டமன்னன். மனுநீதிச்சோழன் நேர்மைக்கும் நீதிக்கும் பெயர்பெற்றவன். நீதி வழுவாது ஆட்சி செய்து வந்த மன்னனை மக்கள் தங்கள் உயிரினும் மேலாக மதித்து வாழ்ந்தனர். மனுநீதிச்சோழன் வெகுநாட்களாக மக்கட்பேறு இல்லாமல் வாடினான். இறைவன் அருளால் அழகே உருவான ஒரு மகன் பிறந்தான். அவனுக்கு வீதிவிடங்கன் என்று பெயரிட்டு அருமையாக வளர்த்து வந்தான். வீதிவிடங்கன் அறிவிலும், நற்பண்புகளிலும் சிறந்தவனாகத் திகழ்ந்தான். உரிய வயதில் மன்னர் அவனுக்கு யானைஏற்றம், குதிரைஏற்றம், தேர்ஓட்டுதல், வாள்பயிற்சி ஆகிய கலைகளைக் கற்பித்தார். வீதிவிடங்கன் அனைத்து கலைகளையும் நன்கு கற்றுத் தேர்ந்தான்.

குடிமக்கள் அனைவரும் மகிழும்படி எப்பொழுது வேண்டுமானாலும் தன்னை யார் வேண்டுமனாலும், சந்திக்க தன்அரண்மனை வாயிலில் ஒரு பெரிய மணியைக் கட்டி வைத்தார். அந்த மணியை அடித்து ஒலி எழுப்பினால் மன்னன் நேரில் வந்து அவர்களின் குறை கேட்டு நீதி வழங்குவதாக அறிவித்தார். மன்னனின் எளிமை கண்டு மகிழ்ந்த மக்கள் மன்னனைப் போற்றிப் புகழ்ந்தனர்.

நீண்ட நாட்களாக மன்னனின் ஆராய்ச்சி மணி ஒலிக்கவில்லை. மன்னனும் தன் குறையில்லா ஆட்சியை நினைத்து பெருமிதம் கொண்டிருந்தான். ஒரு நாள் மாலைவேளை வீதிவிடங்கன் உல்லாசமாகத் தேரில் ஏறி நகர்வலம் வந்தான். தேரைத் தானே ஓட்டி வந்தான். அதே வேளையில் ஒரு கன்றுக்குட்டி துள்ளிக் குதித்து வந்தது. ஆர்வமிகுதியால் வேகமாகத் தேரோட்டி வந்த இளவரசன் கன்றுக்குட்டி இடையில் திடீரென ஓடி வந்ததைக் கவனிக்கவில்லை. அதனால் தேரில் மோதிய கன்றுக்குட்டி துடிதுடித்து இறந்து போனது. அது கண்டு இளவரசன் திடுக்கிட்டான். செய்வதறியாது திகைத்து நின்றான். கண்ணீர் விட்டான். மன்னனின் மாளிகையில் ஆராய்ச்சிமணி முதன்முறையாக ஒலித்தது. அந்தப்புரத்திலிருந்த மன்னன் திடுக்கிட்டான். மந்திரி பிரதானியர் புடைசூழ வாயிலுக்கு ஓடி வந்தான். ஒரு மனிதனை எதிர்பார்த்து வந்த அவனுக்கு ஒரு பசு மணியடித்தது அதிர்ச்சியாக இருந்தது. நடந்தது என்னவென்று அறிந்தான். அவன் ஆட்சிக்காலத்தில் வாயில்லாப் பசுவிற்கு ஏற்பட்டது பேரிழப்பு. அதற்குக் காரணமானவன் வேறு யாருமல்லன். மன்னனின் மகனே! இப்போது என்ன செய்வான்? தன் மகனென்று அவனைக் காப்பாற்றுவானா? அல்லது தன் கன்றை இழந்து வாடும் அந்தப் பசுவிற்கு உரிய நீதியை வழங்குவானா?

தெரிந்து கொள்ள வாருங்கள் அரங்கத்துக்குள் செல்வோம்.



## காட்சி-1

இடம் : அரசவை மண்டபம்
காலம் : நண்பகல்
உறுப்பினர்கள் : அரசர் மனுநீதிச் சோழர், அமைச்சர் பெருமக்கள்

( அவையில் மன்னரும், அமைச்சர் பெருமக்களும் வீற்றிருக்கின்றனர். அப்போது ஒரு தச்சர் அங்கு வந்து மன்னரைப் பணிந்து வணங்குகிறார். இனி ....... )

அரசர் : வருக, தச்சரே. உம்மிடம் நேற்றுக் கொடுத்த வேலையை முடித்து விட்டீரா?

தச்சர் : ஆம், மன்னா! தாங்கள் ஆணையிட்டபடியே முடித்து விட்டேன். எப்பொழுது வேண்டுமானாலும் மன்னர் வந்து பார்வையிடலாம்.

அரசர் : அப்படியா? மிக்க மகிழ்ச்சி. அமைச்சர் பெருமக்களே, “சோழநாடு சோறுடைத்து” இது உலகறிந்த செய்தி. அது மட்டுமா? “நம் சோழர் குலத்துக்குப் பெருமை சேர்க்கும் மற்றொரு செய்தி சோழ நாட்டின் நீதி தவறாத ஆட்சிமுறையன்றோ?” “மக்கள் மன்னனான”, என்னை என் மக்கள் எந்தவிதத் தடையுமின்றி நேரில் காண வேண்டும். என் ஆட்சியில் எந்த ஒரு குடிமக்களுக்கும் இன்னல் ஏற்படக்கூடாது என்று முடிவு செய்தேன். அதற்காக நான் கண்ட ஒரு முறை தான்ஆராய்ச்சிமணி. அதை இந்தத் தச்சர் சிறப்பாகச் செய்து முடித்துள்ளார்.

அமைச்சர் : ஆராய்ச்சிமணியா! அது எதற்கு மன்னா? அதைக் கொண்டு நீங்கள் எப்படி நீதி வழங்க முடியும்?

அரசர் : சொல்கிறேன். கேளுங்கள் அமைச்சரே. நம் அரண்மனையின் வாசலில் ஒரு மாபெரும் மணிக்கூண்டைக் கட்டி அதில் ஒலி எழுப்ப வசதியாக அதன் முனையில் பெரிய கயிற்றையும் கட்டித் தொங்கவிடப் போகிறேன். அது மட்டுமின்றி அந்த மணியின் அசைவு எனக்கு உடனடியாகத் தெரியும் படியாக மணியுடன் மற்றொரு கயிற்றை இணைத்து என் அறையில் கட்டி வைக்கப் போகிறேன். குடிமக்கள் தங்களுக்கு ஏற்படும் குறைகளை மணியை அடித்து ஒலி எழுப்பினால் நானே நேரில் வந்து அவர்கள் குறைகளைத் தீர்த்து வைப்பேன்.

அமைச்சர் : அரசே! இதிலென்ன புதுமை? நீங்கள் தான் எந்தக் குறையையும் மக்களுக்கு வைப்பதில்லையே. அப்படி இருக்கும் பொழுது ................

அரசர் : நீங்கள் சொல்வது முற்றிலும் உண்மையே! ஆனால் தங்கள் குறைகளை வெளிப்படையாகச் சொல்வதற்குச் சிலர் தயங்கலாமல்லவா? மேலும், இந்த ஆராய்ச்சி மணியின் நோக்கமே, உடனுக்குடன் நீதி வழங்குவதில் தான் உள்ளது. எப்போது ஆராய்ச்சிமணி ஒலித்தாலும், நானே நேரில் சென்று அவர்களின் பிரச்சனைகளை உடனடியாகத் தீர்த்து வைப்பேன்.

அமைச்சர் : ஆஹா, என்ன அற்புதமான சிந்தனை. மக்களின் மேல் தாங்கள் கொண்டுள்ள அன்பும், நீதி வழுவாது ஆட்சி செய்ய நீங்கள் செய்யும் முயற்சிகளும் என்னை வியக்க வைக்கின்றன. நீங்கள் தாம் சிறந்த மன்னர் இந்நிலவுலகம் உள்ளவரை உங்கள் புகழ் என்றும் நிலைத்திருக்கும்.

( அரசவை கலைகிறது. அரண்மனையின் வாயிலில் ஒரு மாபெரும் மணிக்கூண்டு அரசன் ஆணைப்படி கட்டப்பட்டு மணியின் முனை அரசன் கட்டில்வரை இணைக்கப்படுகிறது. வெகுகாலமாகவே அந்த ஆராய்ச்சிமணி ஒலிக்கப்படவில்லை. அரசன் தன் நீதிவழுவா ஆட்சியை நினைத்து பெருமையும் கர்வமும் கொண்டான். அன்று வழக்கம் போல அரசவை கூடியது. அமைச்சர்கள் சூழ மன்னர் அமர்ந்திருக்கிறார். அப்போது ஆராய்ச்சிமணி ஒலிக்கிறது. இனி .....)

## காட்சி - 2

| | | |
|---|---|---|
| இடம் | : | அரசவை |
| காலம் | : | காலை வேளை |
| உறுப்பினர்கள் | : | அரசர், அமைச்சர் பெருமக்கள், வாயிற்காப்போன் |
| வாயிற்காப்போன் | : | அரசே..... அரசே ..... என்றழைத்தவாறு பதறியடித்து ஓடி வருகிறான். |
| அரசர் | : | என்ன ஆயிற்று? ஏன் இப்படித் தலைதெறிக்க ஓடி வருகிறாய்? பதற்றப்படாமல் சொல். |
| வாயிற்காப்போன் | : | அரசே! இதுவரை நான் கண்டும் கேட்டுமிறாத அதிசயம். எப்படிச் சொல்வது? என்று தயக்கமாக இருக்கிறது. |
| அரசர் | : | தயக்கப்படத் தேவையில்லை. சொல்ல வந்த செய்தியை உடனே சொல். |
| வாயிற்காப்போன் | : | அரசே! அது வந்து ..... அது வந்து ..... நம் வாயிலுள்ள ஆராய்ச்சிமணி. |
| அரசர் | : | என்ன ஆனது? அதற்கு! யாரேனும் அதை அடித்தார்களா? விபரமாகச் சொல். இவ்வளவு காலமாக யாருக்கும் எந்தக் குறையும் இல்லை என்றல்லவா இறுமாந்திருந்தேன். இதோ! நானே வருகிறேன். |

( அரசர் அரண்மனை நோக்கி விரைய, அமைச்சர்களும் அவரைப் பின் தொடர்ந்து செல்கின்றனர். )

| | | |
|---|---|---|
| அரசர் | : | என்ன இது! விந்தையாக இருக்கிறது! இந்தப் பசுவிற்கு என்ன நேர்ந்தது? ஆராய்ச்சிமணியை அடித்துக் கொண்டிருக்கிறதே. என் ஆட்சியில் வாயில்லாத பசுவுக்கு என்ன குறை நேர்ந்தது? இதை நான் எப்படிப் பொறுத்துக் கொள்வேன்? துயரம் தாளாமல் அதன் கண்களில் வழியும் கண்ணீரைப் பாருங்கள். ஐந்தறிவு கொண்ட விலங்கின் துயர்களைய மறுத்தான் என்று இவ்வுலகம் என்னைப் பழிக்குமே! |

இனி என் வாழ்நாளெல்லாம் இந்த பழிச்சொல்லை நான் சுமக்க வேண்டிவருமோ? எனக்கொன்றும் விளங்கவில்லையே. யாரங்கே? உடனே சென்று பசுவிற்கு நேர்ந்த இன்னலை அறிந்து வாருங்கள்.

காவலாளிகள் : உத்தரவு அரசே. இப்போதே, சென்று செய்தியுடன் மீண்டும் வருகிறோம்.

( மன்னரின் அருந்தவப் புதல்வன் வீதிவிடங்கன். இளம் வயதிலேயே வீரதீரப் பராக்கிரமங்களில் ஈடுபட்டுத் தலைசிறந்த வீரனாக ஆசைப் பட்டான். அப்படி அவன் நகர்வலத்தில் ஈடுபட்டிருக்கையில் ஆர்வ மிகுதியால் வீதியில் தேரை மிக வேகமாக ஓட்டிச் சென்றான். அங்கு ஒரு பசுங்கன்று ராஜபாட்டையில் துள்ளி ஓடி வந்தது. அதிவேகமாக வந்து கொண்டிருந்த தேரை நிறுத்த இளவரசன் முற்படுவதற்குள் அந்தப் பச்சிளங்கன்று தேர்க்காலில் அகப்பட்டுக் கொண்டது. அடிபட்ட வேகத்தில் அந்தக் கன்று தூக்கி எறியப்பட்டு அதன் அன்னையின் காலடியில் சென்று விழுந்தது. கன்றை இழந்த பசு கனத்த இதயத்துடன் மன்னரின் அரண்மனை முன்பாக வந்து நின்றது. மணிக்கூண்டை உற்றுப் பார்த்தது. ஆற்றொணாத் துயரத்தில் அதன் கண்கள் கண்ணீர் வழியத் தன் வாயினால் அதன் கயிற்றைப் பிடித்து இழுத்தது. இனி .... )



## காட்சி - 3

| | | |
|---|---|---|
| இடம் | : | அரசவை |
| காலம் | : | காலை வேளை |
| உறுப்பினர்கள் | : | அரசர், அமைச்சர் பெருமக்கள் |
| அமைச்சர் | : | அரசே, தங்கள் முடிவை அருள்கூர்ந்து மாற்றிக் கொள்ளுங்கள். |
| அரசர் | : | அமைச்சரே, என்ன சொல்கிறீர்? என்னை மக்கள், நீதி தவறாத மன்னன் மனுநீதிச் சோழன் என்று போற்றுகிறார்களே அதற்கு இழுக்கு நேரிட ஒரு போதும் அனுமதியேன். பசுவின் கதறலுக்குச் செவிசாய்க்காத கொடியோன் என்ற அவச்சொல்லுக்கு நான் ஆளாக விரும்பவில்லை. |
| அமைச்சர் | : | அரசே, சற்று பொறுங்கள். வீதிவிடங்கன் தங்கள் மகன். இந்நாட்டின் ஒரே வாரிசு. பசுவின் கன்றை அவன் வேண்டுமென்று கொல்லவில்லை. அவனை அறியாமல் நேர்ந்த விபத்து. அதற்காக நீங்கள் இப்படி ஒரு முடிவை எடுக்க வேண்டுமா? |
| அரசர் | : | ஆம், அது தான் சரி. இறந்து போன கன்றை உயிர்ப்பிக்க இயலாது. ஆனால் உயிருக்கு உயிரைத் தரலாம். அத்துடன் அந்தத் தாய்படும் வேதனையை இந்தக் குற்றம் செய்தவனின் தாயும் அனுபவித்தலே சரியான தண்டனையாகும். “உடனே தேரைப் பூட்டுங்கள். அந்தக் கன்று அடிப்பட்டு உயிர்நீத்த இடத்தில் வீதிவிடங்கனை நிறுத்துங்கள். தவறு செய்தவன் தண்டனை அனுபவித்தே ஆக வேண்டும்”. |
| அமைச்சர் | : | அரசே, மீண்டும் தங்களைப் பணிந்து வேண்டுகிறேன். இளவரசரைக் கொல்லும் எண்ணத்தை விட்டுவிடுங்கள். |
| அரசர் | : | போதும் அமைச்சரே. நிறுத்துங்கள். இன்று நானே தேரை ஓட்டுகிறேன். என் மகனை தேர்க்காலிலிட்டு கொல்லத்தான் போகிறேன். அந்தப் பசு அடைந்த துயரத்தை நானும் அடைய வேண்டும். இது தான் அந்தப் பசுவுக்கு நான் அளிக்கும் தீர்ப்பு. இந்தச் சோழபரம்பரை என்னால் தலைகுனியக் கூடாது. யாரங்கே? தேரைப் பூட்டி வா! இழுத்து வா என் மகனை. இப்போதே அவனைத் தேர்க்காலிலிட்டு நீதியை நிலை நாட்டுகிறேன். |

( தவறிழைத்தவன் தன் மகனே ஆனாலும், குற்றம் குற்றமே என்று எண்ணியதோடல்லாமல், அந்தத் தவறுக்குச் சரியான தண்டனையும் வழங்கி பசுவின் துயர் துடைத்து, வரலாற்றில் அழியா இடம் பெற்றான் மனுநீதிச்சோழன். )

### உரையாடலாம் வாங்க!



நீங்கள் மனுநீதிச் சோழனாக இருந்தால், பசுவின் துயரத்தை எப்படிப் போக்குவீர்கள்?

### சிந்திக்கலாமா?



வீட்டிற்குப் போகும் வழியில் ஓணான் ஒன்றைச் சிறுவர்கள் சிலர் துன்புறுத்துகின்றனர். அவர்கள் செய்தது சரியா அந்தச் செயலை நீங்கள் எப்படித் தடுப்பீர்கள்?

### சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுவோமா?

1. மக்கட்பேறு - இச்சொல்லின் பொருள் ...............................

(அ) குழந்தைச்செல்வம் (ஆ) மக்கள் செல்வம்

(இ) குடிமக்கள் (ஈ) மன்னனின் மகன்

2. ஆர்வமிகுதி - இச்சொல்லைப் பிரித்து எழுதக்கிடைப்பது ...............................

(அ) ஆர்வ + மிகுதி (ஆ) ஆர்வமி + மிகுதி

(இ) ஆர்வ + ம்மிகுதி (ஈ) ஆர்வம் + மிகுதி

3. மணிக்கூண்டு - இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது...............................

(அ) மணிக் + கூண்டு (ஆ) மணி + உண்டு

(இ) மணி + கூண்டு (ஈ) மண்ணு + உண்டு

4. நிலவுலகம் - இச்சொல்லின் பொருள் ........................................

(அ) பூவுலகம் (ஆ) விண்ணுலகம்

(இ) ஊர் (ஈ) நாடு

5. விந்தை - இச்சொல்லின் பொருளைக் கண்டுபிடி. ........................................

(அ) மகிழ்ச்சி (ஆ) கவலை

(இ) அழுகை (ஈ) ஆச்சர்யம்

## வினாக்களுக்கு விடையளி

1. மனுநீதிச்சோழன் ஆராய்ச்சி மணியை அமைக்க என்ன காரணம்?
2. பசுவின் துயரம் என்ன? அதனை மன்னன் எவ்வாறு போக்கினான்?
3. தான் செய்த தவறுக்காக வீதிவிடங்கன் வருத்தப்பட்டானா? இல்லையா?

## அகரமுதலி பார்த்துப் பொருள் அறிக.

பரம்பரை - ........................................

கொடியோன் - ........................................

நீதிவழுவாது - ........................................

வியனுலகம் - ........................................

ஆற்றொணா - ........................................

## சொல்லக் கேட்டு எழுதுக.

1. அரங்கம் 2. ஆராய்ச்சி மணி 3. மனக்குறை

4. நிலவுலகம் 5. வாழ்நாள்

### தெரிந்து கொள்வோம்

மாநகரம், மாமலை, மாமதுரை, மாமுனி, மாதவம் என்று ஒன்றை சிறப்பித்து கூறுவதற்கு மா என்ற சொல் வழக்கத்தில் உள்ளது.

சொற்களை இணைத்து சொற்றொடர் உருவாக்குக.

| | | | |
|---|---|---|---|
| கவிதா | வேகமாக | பறந்தன | ............................................................ |
| குயில்கள் | அழகாக | சென்றது | ............................................................ |
| குதிரை | இனிமையாக | ஆடினாள் | ............................................................ |
| பறவைகள் | மெதுவாக | கூவின | ............................................................ |
| குழந்தை | அமைதியாக | உறங்கியது | ............................................................ |
| ஆமை | உயரத்தில் | ஓடியது | ............................................................ |

கலையும் கைவண்ணமும் - வண்ணம் தீட்டி மகிழ்வோம்



செயல் திட்டம்

நீ வாழும் சூழலில் காணும் பறவைகள் விலங்குகள் பற்றிய செய்திகளைத் திரட்டிப் படத்தொகுப்பு ஒன்றை உருவாக்குக.

# 9 வேலைக்கேற்ற கூலி



இரத்தினபுரி என்ற நாட்டை சௌந்திரபாண்டியன் என்ற மன்னர் சிறப்பாக ஆட்சிசெய்தார். மக்கள் எல்லா நலன்களும் பெற்று மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தனர். நீதி நெறிகளில் சிறந்து விளங்கிய மன்னரை மக்கள் மிகவும் நேசித்தனர். மன்னரின் புகழ் அண்டை நாடுகளுக்கும் பரவியது. அண்டை நாடுகளில் ஒன்றான தர்மபுரி மன்னன் இராஜராஜன் இதனைக் கேள்விப்பட்டார்.

ஒரு நாள் மன்னர் இராஜராஜன் அரசபையில் இரத்தினபுரி மன்னனின் பரவி வரும் புகழ் பற்றிப் பெருமையுடன் பேசினார். “நானும் சிறந்த முறையில் தானே ஆட்சிபுரிகிறேன், எனக்கு மட்டும் ஏன் அத்தகைய புகழ் கிடைக்கவில்லை என்று அமைச்சர்களைக் கேட்டார்”. விடை சொல்ல முடியாமல் அமைச்சர்கள் விழித்தனர்.

அவர்களுள் தலைமை அமைச்சர் மட்டும் எழுந்தார். மன்னா, தங்கள் ஆட்சியில் நம்நாட்டு மக்களுக்கும் எந்தக் குறையும் இல்லை. சிறப்பாக வாழ்ந்து வருகின்றனர். ஆனால் ............ என்று மெல்லிய குரலில் தன் பேச்சை நிறுத்தினார்.

“என்ன ஆனால்” ......... நான் என்ன செய்ய வேண்டும் என்பதைத் தெளிவாகக் கூறுங்கள். நான் மக்களை மகிழ்ச்சியாக வைத்திருக்க வில்லையா? என்றார் மன்னர். மன்னர் மன்னா! இரத்தினபுரி மன்னர் தங்கள் நண்பர்தானே. நீங்கள் ஏன் விருந்தினராக அவருடன் தங்கி அவர் ஆட்சிமுறையை அறிந்து வரக்கூடாது? நல்லாட்சிக்கானவற்றை நாமும் பின்பற்றலாமே என்று அமைச்சர் கூறினார். அரசவையில் கூடியிருந்த மற்ற அமைச்சர்களும் தலைமை அமைச்சரின் கருத்தினை வரவேற்றனர்.

“அப்படியா? சரி, சரி, நான் நாளைக்கே செல்கிறேன். பயணத்திற்கு ஏற்பாடு செய்யுங்கள்” என்று ஆணை பிறப்பித்தார். நட்பின் நிமித்தமாகத் தன் நாட்டிற்கு வருகை புரிந்த தர்மபுரி மன்னரை ஆரத்தழுவி வரவேற்றார் இரத்தினபுரி மன்னர். “சில நாட்களாவது தன் அரண்மனையில் தங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். சிறிது ஓய்வெடுங்கள். நான் அரண்மனைக்குச் சென்று வருகிறேன்” என்றார். “நானும் தங்களுடன் அரசவைக்கு வரலாமா?” என்று கேட்டார் தர்மபுரி மன்னர் இராஜராஜன். “அப்படியா, மிக்க மகிழ்ச்சி, வாருங்கள் நாம் இருவரும் சேர்ந்தே போகலாம்”, என்று கூறிய இரத்தினபுரி மன்னர், அவரையும் அரசவைக்கு அழைத்துச் சென்றார்.

அரசவையில் தர்மபுரி மன்னரை அனைவருக்கும் அறிமுகம் செய்து வைத்து தமக்குச் சமமான அரியணையில் அமர வைத்தார். சற்று நேரத்திற்கெல்லாம் அரண்மனை “ஆலாட்டிமணி”, ஒலித்தது. அரசபை ஆரம்பமானது. ஒருவன் கைகட்டி வாய்பொத்தி மன்னர் முன் பணிவாக வந்து நின்றான். யார் நீ? உனக்கு என்ன வேண்டும்? என்று கேட்டார் மன்னர்.

அரசே, நான் ஒரு விறகுவெட்டி. நாள்தோறும் அதிகாலையில் காட்டிற்குச் சென்று காய்ந்து போன மரங்களை தேர்வு செய்வேன். அவற்றை காலை முதல் பொழுது சாயும் வரை ஓய்வின்றி வெட்டிச் சிறு சிறு துண்டுகளாக நேர்த்தியாக உடைத்து விடுவேன். பின்னர் அந்த விறகுகளையெல்லாம் ஒன்று சேர்த்துக் கட்டுகளாகக் கட்டி நகருக்குள் சென்று வீடு வீடாகக் கூவி விற்கிறேன்.

எப்படித் தான் நாங்கள் உடலை வருத்தி வேலை செய்தாலும் இறுதியில் எங்களுக்குக் கிடைப்ப தென்னவோ? இரண்டு வராகன் தான். ஒவ்வொரு நாளும் இந்தக் குறைவான வருமானத்தைக் கொண்டு தான் எங்கள் அன்றாட வாழ்க்கையை நடத்தி வருகிறோம்.

ஆனால், தங்களிடம் பணிபுரியும் அமைச்சர்களுக்கு மட்டும் எப்படி 1000 வராகன் ஊதியமாக வழங்குகிறீர்கள்? இது எந்த வகையில் நியாயமாகும்? இது தான் உங்களின் சிறந்த ஆட்சி முறையா? குடிமக்கள் அனைவரையும் சமமாக நடத்தாதது உங்களுக்கு மிகப் பெரிய குறையாகத் தோன்றவில்லையா? என்று சிக்கலான கேள்விகளை அடுக்கிக் கொண்டே போனான் விறகுவெட்டி. “அடடா, நாம் இதை ... இதைத்தானே ஆவலுடன் எதிர்பார்த்தோம். இரத்தினபுரி மன்னன் இந்த விறகுவெட்டியின் குறையை எவ்வாறு தீர்த்து வைக்கிறார்? என்பதைப் பார்ப்போம்” என்று ஆவலுடன் கவனிக்கலானார் தர்மபுரி மன்னர்.

இரத்தினபுரி மன்னர் சௌந்தரபாண்டியனோ புன்முறுவலுடன், “என் ஆட்சியில் யாருக்கும் எந்தக் குறையும் இருக்கக்கூடாது என்பதில் மிக மிகக் கவனமாக நடந்து வருகிறேன். ஆனால் நீங்களோ! உங்களையும், அமைச்சர்களையும் சமமாக நடத்தவில்லை என்று பாகுபடுத்திக் கூறுகிறீர்கள்.



சற்றுப் பொறுங்கள். உங்கள் ஐயத்தை இன்னும் சிறிது நேரத்தில் தீர்த்துவைக்கிறேன்" என்ற மன்னர் தன் அமைச்சர்களுள் ஒருவரை அழைத்தார். அவர்களிருவருக்கும் ஒரு சோதனை வைத்தார். "அரண்மனைக்கு வெளியே ஏதோ வண்டி செல்வதாக அறிகிறேன். அது என்னவென்று அறிந்து வாருங்கள்" என்றார் மன்னர்.

அரசபையில் நடந்த விவாதத்தை எல்லாம் மிக அமைதியாகப் பார்த்துக் கொண்டிருந்த அமைச்சர் மன்னரின் ஆணையை ஏற்றார். அவ்வாறே விறகுவெட்டியும் செய்தான். அவசரமாக வெளியில் சென்ற விறகுவெட்டி, உடனே வேகவேகமாகத் திரும்பி வந்து, "ஆம் மன்னா அரண்மனைக்கு வெளியே ஒரு இரட்டை மாட்டுவண்டி செல்கிறது" என்றான்.

சரி, அந்த வண்டியில் என்ன இருக்கிறது? என்று கேட்டார் மன்னர். சற்றுப் பொறுங்கள் இதோ பார்த்துச் சொல்கிறேன் என்று மீண்டும் வெளியில் ஓடினான் விறகுவெட்டி, "மன்னா அந்த வண்டியில் நெல்மூட்டைகள் இருக்கின்றன" என்று கூறினான்.

அப்படியா? அந்த வண்டி எங்கிருந்து வருகிறது? என்று கேட்ட மன்னரிடம் அடடா, அதைக் கேட்காமல் விட்டு விட்டேனே சற்றுப் பொறுங்கள் மன்னா, இதோ விரைவில் வருகிறேன் என்று கூறியவாறு மீண்டும் ஓடத் தொடங்கினான் அந்த விறகுவெட்டி. அரசரின் ஆணையை ஏற்று வெளியில் சென்றிருந்த அமைச்சர் அதுசமயம் அரசவைக்குள் நுழைந்தார்.

அமைச்சரைப் பார்த்த மன்னர், ஐயா, விறகுவெட்டி சற்று நில்லுங்கள். இதோ அமைச்சர் வந்து விட்டார். உங்களிடம் நான் கேட்ட அதே கேள்வியை அவரிடமும் கேட்கிறேன். அவர் பதிலைக் கேளுங்கள் என்று கூறிய மன்னர், "அமைச்சரே! நீங்கள் என்ன பார்த்தீர்கள்?" என்றார். அமைச்சரும், மன்னரைப் பார்த்து, "மன்னா, அரண்மனைக்கு வெளியே நாற்பது நெல்மூட்டைகள் ஏற்றிய வண்டி ஒன்று மார்கம்பட்டியிலிருந்து அண்டை நாடான விருதுநகர் சென்று கொண்டிருக்கிறது. வண்டியோட்டியும் அவன் நண்பனும் வண்டியினை ஓட்டிச் செல்கிறார்கள்.

வண்டியில் ஏற்றப்பட்டிருக்கும் நாற்பது மூட்டை நெல்லும் நம் நாட்டில் விளைந்த தரமான நெல்வகைகள். வானம் மேகமூட்டமாக இருப்பதால் மழை வருவதற்குள் மூட்டைகளை இறக்கிவிட்டு இன்று இரவுக்குள் மார்கம்பட்டி திரும்பி வரவேண்டி விரைந்து செல்கின்றனர் என்று கூறி தான் விசாரித்து அறிந்தவற்றை சபையில் தெரிவித்தார்.

அமைச்சர் ஒரே மூச்சில் கூறிய விபரங்களையெல்லாம் கேட்டு, சபையில் வாய்பிளந்து நின்றான் அந்த விறகுவெட்டி, “ஐயா, விறகுவெட்டி இப்போது தீர்ந்ததா உங்கள் சந்தேகம். அமைச்சருக்குக் கொடுக்கும் கூலி சரியானது தானே? இப்போது சொல்லுங்கள்” என்று கூறினார்.

மன்னா, என்னை மன்னித்துவிடுங்கள். என் மனக்குறை நீங்கியது. அமைச்சரின் திறமையையும் அறிவுக்கூர்மையையும் கண்டு நான் வியக்கிறேன். அவருடன் என்னை ஒப்பிட்டுப் பார்த்தது என் அறியாமையே. “நான் நான்தான்”, “அமைச்சர் அமைச்சர்தான்”. அவரவர் திறமைக்கேற்ற வேலையும், வேலைக்கேற்ற கூலியும் கொடுப்பது தான் நன்று என்பதை நன்றாகவே புரிந்து கொண்டேன் என்றான் அந்த விறகுவெட்டி.

இத்தனை நேரமாக அரசவை நிகழ்ச்சிகளைப் பார்த்துக் கொண்டிருந்த தர்மபுரி அரசர் “அடடா, நாம் கூட இந்த மன்னருக்குக் கிடைக்கும் பேரும், புகழையும் எண்ணிப் பொறாமைப்பட்டோமே. உண்மையை உணர்ந்து கொள்ள இது ஒரு நல்ல வாய்ப்பாக அமைந்தது” என்று இரத்தினபுரி மன்னன் தன் குடிமக்களிடம் நடந்து கொண்ட அணுகுமுறையை எண்ணி வியப்படைந்தார். தானும் தன் குடிமக்களை அவ்வாறே நடத்த முடிவு செய்தார்.

**உரையாடலாம் வாங்க!**



கதையை உம் சொந்த நடையில் கூறுக.

**சிந்திக்கலாமா?**



அமைச்சர் வண்டிக்காரரிடம் எல்லாத் தகவல்களையும் பெறுவதற்கு என்னென்ன கேள்விகளைக் கேட்டிருப்பார்? எழுதுங்கள்.

## வினாக்களுக்கு விடையளி

1. இரத்தினபுரி மன்னர் தம் குடிமக்களை எவ்வாறு நடத்தினார்?
2. விறகுவெட்டி, மன்னரிடம் தம் மனக்குறையாக என்ன கூறினார்?
3. மன்னர் அமைச்சரிடமும், விறகுவெட்டியிடமும் என்ன வேலை அளித்தார்?

### படத்தைப் பார்ப்போம் வினாக்கள் உருவாக்குவோம்



எ.கா. படத்தில் எத்தனை விலங்குகள் உள்ளன?

1. ----------------------------------------------------------------
2. ----------------------------------------------------------------
3. ----------------------------------------------------------------

### விடுபட்ட எழுத்துக்களை நிரப்பி விடுகதைக்கு விடையைக் கண்டுபிடிக்க.

1. ஆகாயத்திற்கும் பூமிக்கும் ஒரே சங்கிலி அது என்ன?
2. ஒளியில் தொடர்வான். இருளில் மறைவான் அவன் யார்?
3. இரவெல்லாம் பூக்காடு. பகலெல்லாம் வெறும் காடு. அது என்ன?
4. ஊரைச் சுமந்தபடி உயரத்தில் பறப்பான். அவன் யார்?

| | | | | |
|---|---|---|---|---|
| | ம | | | |
| | நி | | ல் | |
| | வா | | ம் | |
| வி | மா | | ம் | |

### பதிலைப் பார்த்து வினாக்களை உருவாக்குவோம்.

1. கேள்வி : ----------------------------------------------------------------

   பதில் : தமிழ்நாட்டின் தலைநகரம் சென்னை.

2. கேள்வி : ----------------------------------------------------------------

   பதில் : ஆத்திசூடியை எழுதியவர் ஔவையார்.

3. கேள்வி : ----------------------------------------------------------------

   பதில் : சூரியன் கிழக்கு திசையில் உதிக்கும்.



## தமிழோடு விளையாடு

### சொல் உருவாக்கப் புதிர்

வடிவங்களைக் கொண்டு அதற்குரிய எழுத்தை எழுதிச் சொல் உருவாக்குக. ஒவ்வொரு வடிவமும் ஓர் எழுத்தைக் குறிக்கும்.



| | | | | | |
|---|---|---|---|---|---|
| சை | ல | வி | ப் | ப | கை |

1.  ..............................

2.  ..............................

3.  ..............................

4.  ..............................

5.  ..............................

6.  ..............................

7.  ..............................

## சொல் எழுதுக - சொற்றொடர் அமைக்க

| | | |
|---|---|---|
| ம | ண / ன | ம் |

மணம் பூக்கள் மணம் வீசும்

மனம் மனிதருக்கு நல்ல மனம் வேண்டும்

| | |
|---|---|
| வீ | டு / ணை |

.................... ..........................................................

.................... ..........................................................

| | |
|---|---|
| வ | லை / டை |

.................... ..........................................................

.................... ..........................................................

| | |
|---|---|
| தே | ள் / ன் |

.................... ..........................................................

.................... ..........................................................

| | |
|---|---|
| ம | லை / ழை |

.................... ..........................................................

.................... ..........................................................

| | |
|---|---|
| பா | ல் / னை |

.................... ..........................................................

.................... ..........................................................

| | |
|---|---|
| இ | லை / ளை / ழை |

.................... ..........................................................

.................... ..........................................................

.................... ..........................................................

### செயல் திட்டம்

பல்வேறு தொழில் செய்பவர்களின் படங்களை ஒட்டித் தொகுப்பு ஏடு தயாரித்து வருக.

## அகர முதலி

| | | | |
|---|---|---|---|
| 1. | அதிர்கின்ற | - | ஒலிக்கின்ற |
| 2. | அழல்கதிர் | - | கதிரவன் |
| 3. | ஆற்றொணா | - | தாங்கமுடியாத |
| 4. | இன்சொல் | - | இனிமையான சொல் |
| 5. | இன்னல் | - | துன்பம் |
| 6. | காவாக்கால் | - | காக்காவிட்டால் |
| 7. | குனிந்து | - | வளைந்து |
| 8. | கொடியோன் | - | துன்புறுத்துபவன் |
| 9. | சவாரி | - | பயணம் |
| 10. | செவிசாய்த்தல் | - | கேட்க விரும்புதல் |
| 11. | சோகாப்பர் | - | துன்பப்படுவர் |
| 12. | தண்ணென் கதிர் | - | நிலவின் ஒளி |
| 13. | நித்தம் | - | நாள்தோறும் |
| 14. | பரம்பரை | - | தொன்றுதொட்டு |
| 15. | பொறாமை | - | காழ்ப்பு |
| 16. | பொறை | - | அடக்கம் |
| 17. | போலி | - | ஒன்றைப்போல இருத்தல் |
| 18. | போற்றுதல் | - | புகழ்தல் |
| 19. | மரியாதை | - | நேர்மையான ஒழுக்கம் |
| 20. | மெய்ப்பொருள் | - | உண்மைப்பொருள் |
| 21. | வரம்பு | - | எல்லை |
| 22. | வருந்தியது | - | துன்பமடைந்தது |
| 23. | வன்சொல் | - | கடுஞ்சொல் |
| 24. | வியனுலகம் | - | பரந்த உலகம் |
| 25. | வேளாண்மை | - | உழவு |
| 26. | உற்சாகம் | - | மகிழ்ச்சி, ஊக்கம் |
| 27. | பரிதாபப்பட்டது | - | இரக்கப்பட்டது |
| 28. | நகர்வலம் | - | ஊர்வலம் |
| 29. | நீதிவழுவாது | - | நேர்மை குறையாமல் |

## கற்றல் விளைவுகள்

| கேட்டல் | பேசுதல் | படித்தல் | எழுதுதல் |
|---|---|---|---|
| • சூழ்நிலையில் தாம் உற்றுக்கேட்ட பல்வேறு விவரங்களைப் புரிந்து கொண்டு வெளிப்படுத்துவர். | • பல்வேறு படைப்புகளின் தலைப்புகள், சூழல்கள், கதைமாந்தர்கள் குறித்துப் பேசுவர். | • தாங்கள் விரும்பும் நூல்களைத் தேர்ந்தெடுத்துப் படிக்க ஆர்வம் கொள்வர். | • பல்வேறு நோக்கங்களுக்கேற்ப சூழல்களுக்கேற்ப எழுதுவர். உறவு முறைக் கடிதம் எழுதுவர். |
| • பிறர் கூறுவதைக் கவனமுடன் கேட்பர் | | • செய்தித்தாள்கள், சுவரொட்டிகள், அறிவிப்புகள், விளம்பரங்கள், ஆகியவற்றைப் படித்துப் புரிந்து கொள்வர். | • திருக்குறள், செய்யுள் பகுதிகளை அடிபிறழாமல் எழுதுவர். |
| • வினாக்கள் எழுப்புவர். அவற்றின் மீதான தங்கள் கருத்துகளை / எதிர்வினைகளை வெளிப்படுத்துவர். | | • படித்து உணர்ந்தவற்றோடு தங்கள் அனுபவங்களையும் உணர்த்துவர் | • சொல்வதைக் கேட்டு எழுதுவர். |
| • தெளிவாகப் பொருள் விளங்க ஒப்பிப்பர். | | • படிக்கும் பகுதியில் இடம்பெறும் பழமொழிகள், மரபுச் சொற்களை அறிவர். | • குழந்தைகளுக்கான எளிய அகர முதலியைப் பயன்படுத்த அறிவர். |
| | | • சிறு சிறு கதைகள், பாடல்களை உரிய ஒலிப்புடன் பொருள் விளங்கப் படிப்பர். | • சொற்களை அகரவரிசைப் படுத்துவர். |
| | | | • பொருத்தமான நிறுத்தற்குறிகளைப் பயன்படுத்தி எழுதுவர். |

| நடைமுறை இலக்கணம் அறிதல் | கற்கக் கற்றல் | சொற்களஞ்சியப்பெருக்கமும் சொல்லாட்சித் திறன்களும் |
|---|---|---|
| • நடைமுறை இலக்கணமறிந்து, பேச்சிலும், எழுத்திலும் பயன்படுத்துவர்.<br>• காலம் அறிவர். (இறந்த காலம், எதிர்காலம், நிகழ்காலம் ) | • கதைநூல்கள் படிப்பர்.<br>• குழந்தைளுக்கான எளிய அகரமுதலி களைப் பயன்படுத்த அறிவர்.<br>• கணினியில் உரைகள், வசனங்கள், முழக்கத் தொடர்கள் கேட்பர்.<br>• தகவல்கள், சொற்பொருள்கள் தேடி அறிவர். | • சொற்களஞ்சியப் பெருக்கத்திற்காகப் படிப்பர்.<br>• சிறுவர்களுக்கான கதைகள், பாடல்களை விரும்பிப் படிப்பர்.<br>• பழமொழிகள், மரபுச்சொற்கள் அறிவர்.<br>• தொழிலாளர், தொழில்சார் பெயர்கள், சிறப்புவாய்ந்த நகரங்கள், ஊர்களின் பெயர்கள், இன்றியமையா இடங்களின் பெயர்கள் ( இந்திய மாநிலங்கள், மாவட்டங்களின் பெயர்கள் ) அறிந்து கொள்வர்.<br>• கணினி இணையம் சார்ந்த கலைச்சொற்களை அறிவர். |

| படைப்புத்திறன்கள் | விழுமியங்களை உணர்ந்து பின்பற்றும் திறன் | வாழ்வியல் திறன்களை உணர்ந்தறிந்து செயல்படுவர். |
|---|---|---|
| • சிறுவர்களுக்கான கதைகள், பாடல்கள் எழுத முனைவர்<br>• விளம்பரங்கள், அறிவிப்புகள், நிகழ்ச்சிநிரல்கள் உருவாக்க அறிவர்.<br>• பாடலின் வரிகளை மாற்றிப் பாடுவர்.<br>• கற்பனைக்கடிதம் எழுதுவர்.<br>• கலையும், கைவண்ணமும் | • காலம் தவிர்க்காமை<br>• விதிகளைப் பின்பற்றுதல்<br>• தூய்மை பேணுதல்<br>• பொருள்களைப் பாதுகாத்தல்<br>• பிறர்க்கு உதவுதல்<br>• பிற உயிர்களிடத்தில் அன்பு காட்டுதல்<br>• கூட்டுணர்வு<br>• நட்புணர்வு<br>• உண்மை பேசுதல்<br>• சேமிப்புணர்வு<br>• நன்றியுணர்வு<br>• தன்னம்பிக்கை | • தன்னை அறியும் திறன்<br>• கூர்சிந்தனைத் திறன்<br>• சிக்கல் தீர்க்கும் திறன்<br>• முடிவெடுக்கும் திறன்<br>• படைப்பாக்கச் சிந்தனை<br>• சிறந்த தகவல் தொடர்புத் திறன்<br>• இணக்கமான உறவுக்கான திறன்<br>• பிறரை அவர் நிலையிலிருந்து புரிந்துகொள்ளும் திறன்<br>• உணர்வுகளைக் கையாளும் திறன்<br>• மனஅழுத்தத்தைக் கையாளும் திறன் |